# தீபம்

www.deepam.lk

14.08.2015, தீபம் 5

விலை 10 ரூபா


# விடுதலைப்புலிகளின் வெற்றிடத்தை நிரப்பவே வந்தேன்

## மனம் திறக்கிறார் அங்கஜன்!



'நம்பிக்கை இழக்காதீர்கள். அக்கறை காட்ட நாங்கள் இருக்கிறோம். அரசியல் எனக்கு வியாபாரம் அல்ல. 2009 இல் தமிழர்களின் அரசியல் தலைமையில் ஏற்பட்ட வெற்றிடம்தான் என்னை அரசியல் செய்ய தூண்டியது' என்கிறார் யாழ் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள சுதந்திரக்கட்சி வேட்பாளர் அங்கஜன் இராமநாதன். தீபம் ஊடகக்குழுமத்திற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் எம்முடன் மனம் திறந்து உரையாடினார். அவற்றின் தொகுப்பு இது.

'மாற்றம் அவசியம் என்ற மக்களின் எதிர்பார்ப்பின்படியே ஜனவரி 8 மாற்றம் நிகழ்ந்தது. 10 லட்சம் மக்கள் 200 லட்சம் மக்களுக்கு ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்திருத்தின்றார்கள். அந்த மாற்றம் இன்னும் எங்களுடைய பிரதேசத்திற்கு வரவில்லை. அதனால்தான் எங்கள் நிலைமை இன்னும் ஏமாற்றமாகவே இருந்து கொண்டிருக்கின்றது. அந்த மாற்றம் வரவேண்டும். அதற்கு அந்த புதிய தலைமுறை முயற்சிக்க வேண்டும்.

2009 மே 18 வரைக்கும் எனக்கு அரசியலிற்குள் வரவேண்டுமென்ற தேவை இருக்கவில்லை. எங்களுடைய விடயத்தை யாரோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் இருந்தது. அதற்க்குப்பிறகு வந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு யாரும் வருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்த இளைஞர்களில் நானும் ஒருவன். குப்பைகளை நாமே இறங்கி சுத்தம் செய்ய வேண்டுமென்பதற்காகவே களமிறங்கினேன்.

எனது குடும்பம் அரசியல் சம்பந்தப்பட்ட குடும்பமும் இல்லை. அப்பா வடமராட்சி வல்வெட்டிதுறையை சேர்ந்தவர். எனது அம்மா அளவெட்டியைச் சேர்ந்தவர். நாங்கள் இருந்த இடம் வீமன் கிராமம். நாங்கள் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனது அம்மாவுடைய அப்பா ஒரு கணித ஆசிரியர். பின்னர் அப்பா படிப்படியாக உழைத்து முன்னேறி எனக்கு வெளிநாட்டுக்குச் சென்று படிப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்.

தேசியக்கட்சியில் இருந்தாலே மக்கள் பிரச்சனைகளை தீர்க்க முடியுமென நம்புகிறேன். அரசாங்கத்திலிருந்தாலும் மக்கள் பிரச்சனையை பேச முடியும். பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இங்கிருந்து 15,20 உறுப்பினர்கள் போனாலும், அவர்கள் எதிர்க்கட்சியிலேயே அமரப்போகிறார்கள். எதிரணியிலிருந்து எவ்வளவுதான் கதைத்தாலும் எடுபடாது. உள்ளிருந்தே பேசுவதே சாத்தியமானது.

தேசியக்கட்சியிலிருந்தபடி மாற்றங்களை கொண்டுவரலாமென நம்புகிறேன். இதில் எனக்கு நிறைய அனுபவமும் உள்ளது. எந்த அரசியல் பின்னணியுமில்லாமல் பெரிய தலைவர்களுடன் செயலாற்றியிருக்கிறேன். மகிந்த ராஜபக்சவுடன் செயற்பட்டிருக்கிறேன். அபிவிருத்தி, இளைஞர் வேலைவாய்ப்பு, வீட்டுதிட்டம், மின்சார வசதி, உட்கட்டுமானம் போன்றவற்றில் அவரது திட்டங்களை சுதந்திரக்கட்சி அமைப்பாளராக இங்கு நடைமுறைப்படுத்தினேன்.

எனது சேவையை பாராட்டி மத்திய குழு உறுப்பினராக தெரிவு செய்துள்ளனர். இப்பொழுது சிறிலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்துள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன நடுநிலை வகிக்கப் போவதாக அறிவித்து, யாருடைய பிரசாரத்திற்கும் போகவில்லை. எனினும், என்னுடைய அழைப்பில் வடக்கிற்கு வந்தார். அவர் தமிழ் மக்களில் கரிசனனை வைத்துள்ளார். அவர் சிறுபான்மையினரின் ஜனாதிபதி. அவர் எளிமையானவர். அவருடன் செயற்படுவதற்கான காரணம், பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொள்ளலாம் என்பதால்த்தான்.

ஜனதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலம் 6 வருடங்கள்தான். எமது பிரச்சனையை தீர்ப்பதெனில், அவரது பிரதிநிதிகளை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மை பெற்றால் அது சந்தேகம். தேசிய அரசாங்கம் தான் உருவாக்கப்படும்.

நான் ஒரு விடயத்தை சொல்லுகின்றேன். அடுத்த அரசில் நான் ஒரு அமைச்சர். அதனை நான் நிச்சயப்படுத்தி சொல்ல முடியும். ஒரு அமைப்பாளாராக இருந்துதான் இவளவு ஆளுமையை செலுத்தி இருக்கின்றேன். பாராளுமன்ற உறுப்பினரானால் இன்னும் பலமடங்கு அபிவிருத்திகள் செய்யலாம்.

மக்களின் அடிப்படை பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களில்லை. இதற்கான பொறுப்பை அரசியல்வாதிகள்தான் ஏற்க வேண்டும். இன்றைய பிரச்சினையை விட்டு விட்டு நாளைய பிரசினையை பாக்கின்றார்கள். என்னை பொறுத்தவரை இரண்டு பிரச்சினையும் முக்கியம்.

மது போதை பெரும் பிரச்சனையாக உள்ளது. கலாச்சாரம் சீரழிகின்றது. குடும்பங்கள் சீரழிகின்றது. இளைஞர்களிற்கு சரியான வழிகாட்டலில்லாமையால்த்தான் இது நடந்தது.

புலம்பெயர்ந்தவர்களும் இங்கு வந்து மக்களிற்கு உதவிகள் செய்ய வேண்டும். வடக்குகிழக்கு தமிழர்களுக்கு உரியது. தமிழ் மக்கள் ஆட்சி செய்ய வேண்டியது. நீங்களும் எமது மக்கள். நீங்களும் உங்கள் இடங்களுக்கு திரும்பி வந்து உங்கள் வீடுகளை புனரமைத்து தொழில் விருத்தி செய்து வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். நீங்கள் உங்கள் ஊர்களுக்கு திரும்பிவருவதற்கு நான் உதவிகள் செய்வேன்.

கடந்த ஐந்தரை வருடங்களில் எந்த அரசியல் பதவிகளுமின்றி இவ்வளவு வேலைகள் செய்துள்ளோம். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவர் எமக்கு வாக்களித்து ஊக்குவித்தால், மேலும் அதிக பணியாற்ற முடியும்' என்றார்.




மாணவியின் உயிரைப்பறித்த கணிதம்



உங்கள் கைகளில் உங்கள் முகம்




வேட்பாளர்களின் பலங்கள்

உள்ளே...

# யார் அவர்?

இன்னும் இரண்டு நாட்கள்தான் உள்ளன. வெறும் 48 மணிநேரங்கள். உங்கள் பிரதிநிதிகள் யார்... எந்த பிரகடனத்தில் உங்கள் நம்பிக்கையை ஈடுவைக்கப் போகிறீர்கள் என்பதை முடிவெடுக்க இன்னுமுள்ளது சில மணித்தியாலங்கள்தான்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் எண்ணற்ற தேர்தல்கள் கடந்து சென்றுவிட்டன. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தேர்தலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றுதான் சொல்லப்பட்டது. அது ஒருவகையில் உண்மையும் கூட. விடுதலைக்காக போராடும் இனமொன்றின் சுட்டுவிரல்தான் ஆயுதம். துப்பாக்கிவிசைவில்லை அழுத்த மட்டுமல்ல, ஜனநாயக கடமையை செய்வதும் சுட்டுவிரல்தான். நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கப் போகும் தேர்தல்கள் போராடும் இனத்தைப் பொறுத்தவரையில் முக்கியமான ஒன்று. அதனை சுலபமாக கடந்து செல்ல முடியாது.

எத்தனை தேர்தல்களை கடந்து விட்டோம், எத்தனை வாக்குறுதிகளை கேட்டுவிட்டோம் என சலித்துக் கொள்ளும் ஒரு போக்கு இந்தமுறை மேலெழுவதை அவதானிக்க முடிகிறது. உண்மையில் ஜனநாயகரீதியிலான தேர்தல்கள் சடுதியான ஓரிரவு மாற்றங்களை ஈழத்தமிழர்களிற்கு பெற்றுத்தராது. அப்படி எதிர்பார்க்க முடியாது. அது இடையறாத நீண்ட பயணம். என்றாலும், மாற்றங்களிற்கான புறக்காரணிகளை, சூழலை இந்தத் தேர்தல்களால் நிச்சயமாக ஏற்படுத்த முடியும். கடந்த ஜனவரி 8ம் திகதி நாட்டில் ஏற்படுத்தப்பட்ட மௌனப்புரட்சி நல்ல உதாரணம்.

ஜனவரி மௌனப்புரட்சியுடன் தமிழர்கள் கௌரவமாக பேசத்த குந்த தென்னிலங்கை சூழல் ஒன்று தோன்றியுள்ளது. தமிழர்களை பொறுத்தவரையில், விடுதலைப்புலிகளின் பொற்காலத்தில் ஏற்பட்ட சர்வதேச தலையீட்டுடனான சந்தர்ப்பத்தின் பின்னர், ஏற்பட்டுள்ள ஒரு 'பெறுமதியான வாய்ப்பு' இந்தக் காலம். அதன் அர்த்தம் தென்னிலங்கையில் தீர்வு ரெடியாக வைக்கப்பட்டுள்ளது, தமிழர்கள் ஓரணியாக திரண்டு சென்று அதை எடுத்து வந்து அமுல்ப்படுத்துவதுதான் மிச்சம் என்பதல்ல.

மகிந்த ராஜபக்சவை வீழ்த்த உருவாக்கப்பட்ட சர்வதேச பொறிமுறைக்குள்ள அறரீதியான கடப்பாடும், சர்வதேச சமூகத்திற்கு உள்ள பொறுப்புணர்வும் இணைந்து தீர்விற்கு சாதகமான சூழலொன்றை ஏற்படுத்துகின்றன. இந்த சமயத்தை சாதகமாக பயன்படுத்தும் மதிநுட்பம் தமிழர்களிற்கு அத்தியாவசியம்.

விடுதலைப்புலிகளின் பின்னர் இதுவரை தமிழர்கள் எந்தச்சந்தர்ப் பத்திலும் சர்வதேசநகர்வுகளின் மையப்புள்ளியாக இருந்ததில்லை. கருவியாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளனர். அர்ப்பணிப்பு, செயற்றிறன் மிக்க தலைவர்களின் பற்றாக்குறையே இதற்கான பிரதான காரணம். எல்லா விமர்சனங்களிற்கு அப்பாலும், ஒரு விடயத்தில் விடுதலைப்புலிகளின் முன்னுதாரணம் இன்றைய தமிழ் தலைவர்களிற்கு அத்தியாவசியமானது. இலட்சியத்தில் விட்டுக்கொடுப்பற்ற தன்மைதான், சர்வதேச அச்சாணியில் ஒரு மையப்புள்ளியாக விடுதலைப்புலிகளை மாற்றியது. எனினும், அந்தசூழலை அவர்களால் சூட்சுமமாக கையாள முடியவில்லை.

அதன்விளைவுகள்தான் பெருமளவிற்கு தமிழர்களை பேரம்பேசும் சக்தியற்றவர்களாக்கியுள்ளது. இப்பொழுது தமிழர்களிடம் குறிப்பிடத்தகுந்த பேரம்பேசும் அக வல்லமையெதுவும் இல்லை. தமிழர்களிற்கு சார்பான சர்வதேசசூழலும், ஒப்பீட்டளவில் சாதகமான தென்னிலங்கை ஆட்சிமாற்ற சூழலுமே நம்பிக்கையளிக்க கூடிய விதத்தில் உள்ளது.

இப்படியான நிலையில் தமிழர்களின் முன்பாக பாரிய பொறுப் புள்ளது. இந்த கயிற்றில் நடக்கும் வித்தையை நுட்பமாக செய்து காரியமாற்றக்கூடியவர்கள் யார்? இந்த பயணத்தை ஒரு இலட்சியப் பயணமாக செய்ய தயாராக உள்ளவர்கள் யார்? தமது வாழ்க் கையை கூட இதற்காக அர்ப்பணிக்க கூடியவர்கள் யார்? நம்பிக்கை யளிக்கக்கூடிய கடந்த கால வரலாற்றையுடையவர்கள் யார்?

அரசியலை வர்த்தகமாக அல்லாமல், மக்களின் விடுதலை இலட்சியமாக செய்பவர்கள் யார்? குடும்ப நலன்கள் அரசியல் நலன்களை குறுக்கிடாத பிரதிநிதிகள் யார்? உங்கள் பிரச்சனைகளை அருகிலிருந்து பார்த்தவர்கள் யார்? உங்கள் துயரங்களினதும், கண்ணீரினதும் பங்காளி யார்? செயற்படும் ஆற்றலுள்ளவர்கள் யார்? மற்றவர்களால் கையாளப்பட முடியாமல், மற்றவர்களை கையாளும் திறன் படைத்தவர்கள் யார்? தமிழர்களிற்குள் உள்ள அகமுரண்களை தூண்டாமல், வெற்றிகரமாக கையாளக் கூடியவர் யார்?

அடுத்த ஐந்தாண்டுகளிற்கு இவர்களிடம்தான் உங்கள் தலைவிதியை கையளிக்கவுள்ளீர்கள். ஒரு பொருத்தமில்லாவரிற்கு நீங்கள் வாக்களிக்கும் பட்சத்தில் அது பற்றி பின்னர் முணுமுணுக்க எதுவுமில்லை. அவர் அப்படிச் செய்துவிட்டாரே என யாரிடமும் கோள் சொல்லியும் பலனில்லை.

நன்றாக சிந்தித்து, பொருத்தமானவரை தேர்வு செய்யுங்கள். அது உங்கள் இலட்சியப்பயணமாக இருக்கட்டும்.

அதனுடன் சேர்ந்து நீங்களும் பயணியுங்கள்.

- ஆசிரியர்,
தீபம்

அலுவலகம்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

## அடையாளங்களை பாதுகாப்போம்.

வடமராட்சியின் முடக்காட்டு சந்திக்கு அண்மையில் வீதியோரமாக உள்ள தொன்மையான மடத்தின் எஞ்சிய பகுதிகள் இவை. ஆலயத்திற்கு எதிராக அமைந்துள்ள தொன்மையான மடம் பராமரிப்பின்றி அழிந்து, எச்சங்களாக உள்ளது. இதன் எதிரில் தொன்மையான கேணியொன்றும் உள்ளது. அதனை பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புணர்வு ஏற்பட்டு, அதனை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், மடம் தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைககள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்பது கவலைக்குரியது.







## சொன்னார்கள்



**சிவமோகன்**
**- தமிழ்தேசிய கூட்டமைப்பு**

இனப்படுகொலை விவகாரத்தில் அரசு பொறுப்புக்கூற தவறினால் உலகநியதியின் அடிப்படையிர் சர்வகச வாக்கெடுப்பொன்றை நடத்தி தமிழர்கள் பிரிந்து செல்வதை தவிர்க்க முடியாது.



**சம்பந்தன்**
**- தமிழ்தேசிய கூட்டமைப்பு**

தமிழர்களின் பிரதிநிதிகள் என அனைத்து தரப்பினரும் அங்கீகரித்த ஒரே தரப்பு தமிழ்தேசிய கூட்டமைப்புத்தான். இலங்கை வரும் பிரதிநிதிகள் எம்மைத்தான் சந்திக்கின்றனர். இம்முறையும் எம்மை பெருவெற்றியடைய வைத்து சமஷ்டிக்கு மக்களாணை தாருங்கள்



**டக்ளஸ் தேவானந்தா**
**- ஈ.பி.டி.பி**

இணக்க அரசியல் என்பது சரணாகதி அரசியல்ல. அது மக்களின் தேவைகளை நறைவு செய்வது. அதனால்த்தான் கூட்டமைப்பினர் எதிர்ப்பு அரசியல் செய்தபோதும், கடந்த காலத்தில் வடக்கை இவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்ய முடிந்தது.



**அங்கஜன் இராமநாதன்**
**- சிறிலங்கா சுதந்திரக்கட்சி**

கூட்டமைப்பினர் சொல்கின்றர், மைத்திரிபாலவின் காலத்தில்த்தான் பிரச்சனையை தீர்கக்லாம். அவரை நம்புகிறோம் என்று. ஆனால் அவரது கட்சியில் போட்டியிடும் எம்மை பார்த்து சொல்கிறார்கள், சிங்கள கட்சி வேட்பாளர்கள் என. இது முரணாக இல்லையா?



**அருந்தவபாலன்**
**- தமிழ்தேசிய கூட்டமைப்பு**

உணவுப்பொருட்களில் கலந்து பல்வேறு போதைப்பொருட்களை மக்களிற்கு பழக்கப்படுத்தி, எம்மை அழிக்கும் இரகிசய செயற்பாடொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. போதைப்பொருள் விழிப்புணர்வு அமைப்பொன்றின் ஊடாக தற்போது செய்துவரும் பணிகளை, பாராளுமன்றம் சென்றால் மேலும விஸ்தரிப்பேன்.



**உதய கம்பன்பில**
**- பிதுறு ஹெலஉறுமய**

வாஸிம் தாஜூடின் கொலை தொடர்பில் நான் யோசித ராஜபக்சவிடம் கேட்டேன். அவர் சொன்னார், தாஜூடின் எனக்கு அண்ணன் போல. அப்படித்தான் மதிக்கிறேன். நான் படித்த பாடசாலையில்த்தான் அவர் படித்தார். அவருடன் அதிக பழக்கமில்லை என்று

# மறுபக்கம் - கூட்டமைப்பின் மீதான விமர்சனங்கள்!



தற்போதைய சூழ்நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? இப்படியொரு கேள்வியை வாசகர்களிடம் கேட்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில், அண்மைக்காலமாக முகப்புத்தகம், இணையத்தளங்கள் வாயிலாக தமிழ்தேசிய கூட்டமைப்பை விமர்சிப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து காணப்படுகிறது. இந்த விமர்சனங்கள் எவ்வளவு தூரம் சரியானவை என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

2009இல் விடுதலைப்புலிகள் தோற்கடிப் பட்டதன் பின்னர், தமிழர்களின் அரசியல் எதிர்காலம் கிட்டத்தட்ட சூனியமான நிலையைத்தான் எட்டியிருந்தது. மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட முடியாத சர்வாதிகாரியாக தென்னிலங்கையில் எழுச்சிபெற்றபோது, தமிழர் பிரதிநிதிகள் ஒன்றில் அவர் காலடியில் விழுந்தனர். அல்லது தப்பி வெளிநாடுகளிற்கு சென்றனர்.

எந்த நம்பிக்கையுமற்று, எந்த வழிநடத்தலுமற்று தமிழர்கள் நிச்சயமற்ற எதிர்காலமொன்றின் முன் நின்ற சமயத்தில், இப்பொழுது நிற்பது வரையான சூழ்நிலைக்கு தமிழர்களை அழைத்து வந்தது தமிழ்தேசிய கூட்டமைப்பு. இதுதான் தமிழ்தேசிய கூட்டமைப்பின் மகத்தான சாதனையென கொள்ள முடியும்.

யுத்தத்தின் பின்னர் தமிழ்மக்களின் இன அடையாளங்களை அழிக்கவும், அவர்களின் பூர்வீக நிலங்களிலிருந்து அகற்றவும், அரசியல் அடையாளங்களை அகற்றவும் மகிந்த ராஜபக்ச இராணுவவாத அணுகுமுறைகளை மேற்கொண்டதை எல்லோரும் அறிந்தி ருந்தோம். யாரும் பேசமுடியாத நிலையி ருந்தது. எதிர் நடவடிக்கைகள் செய்ய முடியாத நிலையிருந்தது. இந்த சமயத்தில் பெருமளவானவர்கள் பேசாமல் முடங்கி னார்கள். எஞ்சியவர்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள்.

இந்த சமயத்தில்த்தான் தமிழ்தேசிய கூட்ட மைப்பின் கைகளில் ஒரு மாபெரும் பாத்திரத்தை வரலாறு கையளித்திருந்தது. தமிழர்கள் கூட்டமைப்பின் கைகளில் ஒப்படைக்கப்பட்டனர். இந்த சமயத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை என்னவென்றால், தமிழர்களின் பேரம்பேசும் வலு பூச்சியநிலையை அடைந்தி ருந்தது. தமிழர்களின் மாபெரும் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்திருந்தது. தமிழர்களிற்கு சார்பாக இருந்தது, சர்வதேச சூழல் ஒன்றுதான்.

பூச்சியநிலையிலிருந்த தமிழர்களின் பேரம் பேசும் வலுவை, சர்வதேச அபிப்பிராயங் களின் துணையுடன் மெதுமெதுவாக தூக்கி நிறுத்தி, உரிமைப்பயணத்தை இதுவரையான தூரத்திற்கு கொண்டு வந்த மாபெரும் பணியை கூட்டமைப்புத்தான் ஆற்றியுள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு ஜனநாயக வழியை கைக்கொள்ளும் ஒரு அமைப்பு. அதன் செயல்முறை ஜனநாயகத்தின் பாற்பட்டது. ஜனநாயகப் பாதையெனப் படுவது, அதிரடியானதல்ல. ஓரிரவு மாற்றங்களை நிகழ்த்துவதல்ல. ஓரிரவு மாற்றங்கள், மறுஇரவில் வேறுவடிவங்களை அடையலாம். இந்த மாற்றங்களை ஜனநாயக போராட்டங்களில் அவதானிக்க முடியாது. இதுதான் தற்பொழுது சிக்கலான விடயமாக உள்ளது. அதிரடியான மாற்றங் களை பார்த்து பழக்கப்பட்ட இளைய வர்கள் ஓரிரவு மாற்றங்களை எதிர்பார்க்கும் பொழுது, அது கூட்டமைப்பின் மீதான விமர்சனமாக விரிவடைந்து செல்கிறது.

தமிழர்களின் பேரம்பேசும் வலு சடுதியாக பூச்சியநிலையை அடைந்தபோது, அதனை பொறுப்பேற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு, அதற்கடுத்த ஆறுவருடங்களிற்குள் தீர்வை பெற்றுத்தந்திருக்க வேண்டுமென எதிர் பார்ப்பது நடைமுறை சாத்தியமற்றதென்பதை நம்மவர்கள் பார்க்க மறுக்கிறார்கள்.

கடந்த ஆறு வருடங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பு வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் அடையாளமாக எழுச்சி பெற்றுள்ளது. தமிழர்கள் ஓரணியில் நின்றதால் இந்த மாற்றம் சாத்தியப்பட்டுள்ளது. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரங்கத்திற்கு கொண்டு சென்று, தீர்விற்கான புறஅழுத்த மொன்றை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மீது வெற்றிகரமாக ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை தீர்மான மென்பது தமிழர்களின் ராஜதந்திர நகர்வுகளிற்கு கிடைத்த ஒரு குறிப்பிடத்தகுந்த பெறுபேறு. அந்த தீர்மானத்தின் உள்ளடக்கம், வசனங்கள் குறித்த சர்ச்சைகள் தற்போது நிலவினாலும், உண்மையில் அந்த தீர்மானச்சூழல்த்தான் முக்கியத்துவம் மிக்கது. அது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மீது தவிர்க்கவியலாத பொறுப்பை சுமத்துகிறது. அந்த பொறுப்பை ஏற்க மறுத்தால் என்ன நடக்குமென்பதற்கு மகிந்த ராஜபக்ச மிகச்சிறந்த உதாரணம்.

சர்வதேச சூழல் இலங்கை மையமாக கொண்டதல்ல. சர்வதேசசூழலை இலங்கையும், தமிழர்களும் தமக்கு சாதகமாக கையாள்வதிலேயே அனைத்தும் தங்கியுள்ளது. தமிழ்தேசிய கூட்ட மைப்பினர் அதனை சிறப்பாகவே கையாண்டி ருக்கிறார்கள்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பென்பது தனியே ஒரு கட்சியல்ல. அது பல கட்சிகளின் கூட்டிணைவு. தமிழர்களின் பெரும்கட்சி. அதற்கு ஒன்று, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. ஒரு தேர்தலில் வாக்கு கேட்டுவிட்டு, அது முடியாமல் போனால் தலைமறைவாகிவிடும் அரசியல் செயற்பாடுகளெதையும் அது செய்ய முடியாது. மக்களிற்கு கொடுக்கும் வாக்குறுதி களை அது நிறைவேற்ற வேண்டிய நிலை எப்போதும் காணப்படுகிறது. பலகட்சிகளின் கூட்டிணைவென்பதால் ஒருவர் தடுமாறினாலும், அழுத்தம் கொடுத்து வழிக்கு கொண்டுவர ஏனையவர்கள் உள்ளனர். இதனால்த்தான் கடந்த ஆறுஆண்டுகளில் தமிழ்தேசிய கூட்ட மைப்பு ஒரேகட்சியாக உடையாத கட்சியாக நிலைக்க முடிந்தது.

தமிழர்களை பொறுத்தவரையில் இனமேல் தனிநாடு போன்ற தீர்வுகள் சாத்தியமில்லை. கிட்டத்தட்ட அதையொரு 'கனவாக' கருதி அடுத்த யதார்த்தபூர்வ செயல்ப்பாடுகளிற்கு செல்வதுதான் சரி. இப்படியான நிலையிலேயே தமிழ்தேசிய கூட்டமைப்பு சமஷ்டி தீர்வை வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் சகலவிதமான உரித்துக்களுடனும், தம்மைத் தாமே ஆளும் ஒரு தீர்வைத்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்தவகை சமஷ்டி தீர்விற்கு அதிகமான எதனையும் தமிழர்கள் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்பதே யதார்த்தம்.

தென்னிலங்கையில் உருவாகுமென எதிர் பார்க்கப்படும் புதிய அரசு தமிழர் விவகாரத்தில் நம்பிக்கையுடன் நடக்குமென்ற பரவலான எதிர்பார்ப்பு காணப்படுகிறது. புதிய சூழலை தமிழர்களும் ஒருமுறை நம்பிக்கையுடன் அணுகிப்பார்ப்பதில் எந்த தவறும் கிடையாதுதானே.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பெரும்பான் மையை மக்கள் உறுதி செய்வதன்மூலம், சமஸ்டி தொடர்பான விருப்பத்தை மக்கள் வெளிப்படுத்திக் கொள்ளலாம். மக்களின் ஏகோபித்த ஆதரவு கூட்டமைப்பினர் மீதான ஒரு பொறுப்புணர்வையும் அதிகரிக்கச் செய்யும் என்பதையும் கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

அதேசமயத்தில் கூட்டமைப்பின் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும், இப்படி மேலோட்டமாக கடந்தும் சென்றுவிட முடியாதுதான். தம்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கூட்டமைப்பினர் திறந்தமனத்து டனான சுயவிமர்சனத்திற்கு தயாராக வேண்டும். அப்படியொரு விடயம் நடந்தால் மட்டுமே தமிழர்களிற்கு உரிய பலன் கிட்டும்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



கிரிஷாந்
kirishanth300@gmail.com



## கன்னிஅம்மன்

தூக்கணாங் குருவிக்கூடுகள்
நுனிகளில் தொங்கு ம்முதியமரம்

"நேற்று
நான் வருவேன் என்று
நினைத்தாயா" என்றேன்

மஞ்சளாய் வெடித்தது சூரியன்
வாய்க்காலின் வெள்ளம் உடலேறியது

குழந்தைக்குள் சிரிக்கிறாய்

வயல் நெல் நிரப்பிற்று

மீண்டும்
நெடுங்காலத்திற்கு பிறகு
தனதுகருவறையில் அமர்ந்திருக்கும்
கன்னி அம்மனைப்போல்
வீற்றிருக்கிறாய்

நெடு ம்பள்ளத்தில் வீழும்
பேரருவியாய்
திரும்பிச் சொல்கிறாய்
சிலவரிகளை

பின்
பாதைகள் எங்கும் செல்லக் காத்திருக்கின்றன

கருவறை இருட்டு
மூக்குத்தி வெளிச்சம்

## அப்பாவும் கோவர்த்தன கிரியும்

உனது அன்பு,
ஒரு பரிசுத்த மழைக்காடு.

உன் நேசம் பற்றிய விரல்களில்
என் குழந்தைக் கால வாசனை

முதல் பரா லைட் பார்த்த போதும்
முதல் சைக்கிளை விட்ட போதும்
முதல் துப்பாக்கியை வாங்கித் தந்த போதும்
எவ்வளவு நெருக்கமாய் இருந்த நீ

முதல் சிகரட்டின் பின்னும்
முதல் காதலின் வாசனையின் பின்னும்
எவ்வளவு அந்நியமாகிவிட்டாய்

உனது தோல்வியுற்ற தற்கொலை முயற்சியின் பின்னர்
அந்த வீட்டுக்கு நஞ்சு தேய்ந்த கழுத்து
அழுத அம்மாவின் உடலோடு ஒட்டியிருந்தேன்
எவ்வளவு விஷமூறிய பாம்பின் சுவாசம் அது .

பின் அவள்
ஒரு முற்றுப் பெறாத பாசுரத்தைப் போல
முடிக்கவே முடியாமல் தொண்டைக்குள்
சிக்கிக் கொண்டாள் ,

அப்பா
காலம் ,பிம்பங்கள் பெருகும் வெளி .

எவ்வளவு எளிமையானவை நாட்கள்
இந்த நாட்களில் ஒரு தாயை
உனக்குள் வளர்த்திருந்தாய் .

உனது அன்போ
இச் சிறு மழையை எதிர்த்து
என் மேல் தூக்கிப் பிடித்திருக்கும்
மலைக் குடை .




மானிப்பாய லியோ கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வு படங்கள்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# நாடாளுமன்றத் தேர்தல் 2015

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## தன்னம்பிக்கை தன்னிறைவு தன்னாட்சி

பாராளுமன்றத்திலும் சர்வதேசத்திலும்
ஒலிக்கும் உரிமையின் குரலோன்

## எமது எதிர்காலம்
## எமது கையில்...




## ம.ஆ.சுமந்திரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிரேஸ்ட சட்டத்தரணி)
இலங்கை தமிழரசு கட்சி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# டூரிங் டாக்கீஸ்

## லண்டனில் பாதைமாறிய ரகுல்



ரகுல் பிரீத் சிங் ஜூனியர் என்டிஆருடன் ஜோடியாக நடிக்கும் தெலுங்கு பட படப்பிடிப்புக்காக லண்டன் சென்றார். ஒரு காட்சியில் தனியாக அவரே காரை ஓட்டிச் சென்று சில கி.மீட்டர் சென்றதும் யூ டயர்ன் போட்டு திரும்ப வேண்டிய காட்சி படமாக்கப்பட்டது. தனியாக அவர் மட்டும் காரில் அமர்ந்திருந்தார். காருக்குள்ளேயே கமரா பொருத்தப்பட்டது. இயக்குனர் டேக் சொன்னதும் காரை ஓட்டினார். சிறிது தூரம் சென்றபிறகு குறிப்பிட்ட தெருவை மறந்து வேறுபாதையில் சென்றுவிட்டார். கண்ணைகட்டி காட்டில் விட்டதுபோல் தவித்த ரகுல் செல்போனையும் லொகேஷனிலேயே மறந்திருந்தார். கையில் கொடுக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கருவியிலும் சிக்னல் இல்லாமல் பேச முடியவில்லை. பயத்தில் அழுதேவிட்டார். சிறிது தூரம் சென்றபிறகு தொலைத்தொடர்பு கருவிக்கு சிக்னல் கிடைத்தது. பட குழுவினருக்கு தொடர்பு கொண்டு தான் இருக்கும் இடத்தை சொல்ல அவர்கள் வந்து அவரை அழைத்துச் சென்றனர். இது மறக்க முடியாத சம்பவமாக அமைந்துவிட்டாக ரகுல் கூறினார்.

## தாமிரபரணி நாயகிக்கு டும் டும்

'தாமிரபரணி' பானுவிற்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. மலையாள சினிமாவில் பிரபல பின்னணி பாடகியாக விளங்கும் ரிமி டோமியின் சகோதரர் ரிங்கு டோமியை மணக்கவிருக்கிறார். இது ஒரு காதல் திருமணம். வரும் 23ஆம் திகதி கொச்சியில் நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறது. இதனை தொடர்ந்து இம்மாதம் 30 ஆம் திகதி திருமணம் நடைபெறவிருக்கிறது. ஆர்யாவின் 'வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க' மற்றும் பாபி சிம்ஹாவின் 'பாம்பு சட்டை' ஆகிய படங்களில் பானு நடித்துள்ளார். இவைதவிர சகுந்தலாவின் காதலன் என்கிற படத்திலும் நடித்திருக்கிறார். நிறைய கலைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறாராம். திருமணத்திற்குப் பிறகு நடிப்பீர்களா? என்று கேட்டதற்கு, கண்டிப்பாக என் நடிப்பு தொடரும் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார். வாழ்த்துகள் பானு.

## காஜலின் தாராளம்

காஜல் அதிரடியாக தனது சம்பளத்தை குறைத்துள்ளாராம். அண்மைகாலமாக சரியாக வாய்ப்புக்கள் இல்லாமல் தவித்து வந்ததை தொடர்ந்து இந்த முடிவிற்கு வந்துள்ளார். 'பாகுபலி' படத்தில் நடித்த தமன்னா வட, தென்னிந்திய தயாரிப்பாளர்களின் கவனத்தை கவர்ந்ததையடுத்து காஜல் ஆடிப்போயுள்ளாராம். முன்னர் 2 கோடி சம்பளம் கேட்டு காஜல் மிரட்டிக் கொண்டிருந்தார். சம்பளத்தை கேட்டு தயாரிப்பாளர்கள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். இப்படியே போனால் இண்டஸ்ட்ரியிலிருந்து ஒதுக்கிவிடுவார்கள் என்று காஜலுக்கு நெருக்கமானவர்கள் அட்வைஸ் செய்தனர். மேலும் தமன்னாவுக்கு திடீரென்று மவுசு கூடி இருப்பதால் அதை கட்டுப்படுத்தவும் முடிவு செய்தார். தனது சம்பளத்தில் 30 சதவீதத்தை தற்போது குறைத்திருக்கிறார் காஜல். மேக்அப், உணவு உள்ளிட்ட தனது தனிப்பட்ட செலவுகளிலும் 5 சதவீதம் குறைத்துக்கொள்ள தயார் என கூறி வருகிறாராம். இந்த சம்பள தள்ளுபடியால் சில தயாரிப்பாளர்கள் காஜலை தேடத் தொடங்கி இருக்கிறார்களாம்.



## புயலை கிளப்புவாரா பூஜா?



அதர்வாவின் நடிப்பில் உருவான சண்டிவீரன் படம் தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ராஜ்மோகனின் இயக்கத்தில் நடிக்க புதிய படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார். படத்திற்கு பெயரும் வைக்கப்பட்டு விட்டது. 'ருக்குமணி வண்டி வருது' என்பது தலைப்பு. இந்த படத்தில் இவருக்கு ஜோடி போடப் போவது பாலிவுட் நடிகை பூஜா சவேரி. இவர் தற்பொழது பிரபு சாலமன் இயக்கத்தில் தனுஷ் நடித்துவரும் புதிய படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார். பூஜா அறிமுகமானது இந்தி சினிமாவில்த்தான். இந்தியில் சில படங்களில் நடித்த பின்னர் தென்னிந்திய மொழிகளில் தெலுங்கில்த்தான் அறிமுகமானார். அதன்பின்னர் தனுஷ் பட வாய்ப்பு கிடைத்தது. இப்பொழுது அதர்வா படத்தின் மூலம் நாயகியாகிவிட்டார். சிம்ரன் முதல் ஹன்சிகா வரை பாலிவுட் நடிகைகள் பலரும் தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகைகளாக கோலோச்சியிருக்கின்றனர். அந்த அதிர்ஸ்டம் இந்த அழகுப்பதுமைக்கு கிட்டுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அசின் காதலில் விழுந்த கதை இதுதான்

நடிகை அசினின் திருமணம் உறுதியாகிவிட்டது. மைக்ரோ மக்ஸ் நிறுவன அதிபர் ராகுல் சர்மாவை மணக்கிறார். இது காதல் திருமணம். மைக்ரோமக்ஸ் நிறுவனம் 2000ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர் ராகுல் சர்மா. இவருடன் விகாஸ் ஜெயின், சுமீத் அரோரா ராஜேஸ் அகர்வால் ஆகியோர் இணைந்து இந்த நிறுவனத்தை உருவாக்கினார்கள். அசினை கைப்பிடிக்கப் போகும் ராகுல் சர்மாவுக்கு வயது 36. இவரது நெருங்கிய நண்பர் இந்தி நடிகர் அக்ஷய்குமார். இவர் 2012ல் மைக்ரோ மக்ஸ் நிறுவனத்தின் விளம்பர தூதராக இருந்தார். இந்த கால கட்டத்தில் அக்ஷய் குமார் நடித்த 'கிலாடி 786' என்ற பட சூட்டிங்கை பார்ப்பதற்காக ராகுல் சர்மா சென்றிருந்தார். இந்த காலகட்டத்தில் இந்தி கஜினி மிகப்பெரிய வெற்றி பெற்றதால் அசின் பிரபலமாக இருந்தார். அவரை ராகுல் சர்மாவுக்கு அக்ஷய்குமார் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் அக்ஷய்குமார் பங்கேற்கும் சினிமா விருந்துகளிலும் அசினும், ராகுல் சர்மாவும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். ராகுல்சர்மா இசை மீது அதிக ஆர்வம் கொண்டவர். விலை உயர்ந்த புதுப்புது கார்களில் சுற்றுலா தலங்களுக்கு செல்லும் ஆர்வம் கொண்டவர். கடந்த 2 ஆண்டுகளாக அசினும் ராகுல் சர்மாவும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். அப்போது மனம் விட்டு பேசினார்கள். இதில் காதலில் விழுந்து நெருக்கமானார்கள். சமீபத்தில் இரண்டு பேரும் ஒரு காரில் உட்கார்ந்து தங்களை மறந்து பேசிக் கொண்டிருந்ததை, பத்திரிகையாளர் ஒருவர் பார்த்து விட்டார். அவர் படம் எடுக்க முயற்சி செய்ய அசின் சண்டைக்கே போய் விட்டார். இந்த சம்பவத்துக்குப்பிறகு அசின்ராகுல் சர்மா காதல் வெளிச்சத்துக்கு வந்தது. இப்போது கல்யாணம் நடக்கப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஆகா ஓகோ என்று இருந்த பல சினிமா காதல் ஜோடிகள் திருமணம் வரை சென்று மகிழ்ச்சியுடன் பிரிந்த சம்பவங்கள் உண்டு. அசின்ராகுல் சர்மா காதல் திருமணத்தில் முடிய வேண்டும் என்பதே அவரது ரசிகர்களின் ஆசை.




# மாணவியின் உயிரைப்பறித்த கணிதம்

'அம்மா என்னை எக்ஸ்சாம் எழுத விடமாட்டினமாம். அனுமதி அட்டை வந்தது. ஆனால் தரமாட்டினமாம். நான் உங்களை ஏமாற்ற விரும்பல. நான் உங்கள் எல்லோரையும் மிஸ் பண்ணுறன்' இது தான் திவ்வியாவின் இறுதி வரிகள்.

வவனியா மாணவி குணசேகரம் திவ்வியா என்ற மாணவியின் மரணத்தின் பின்னர் வெளியான கடிதத்தின் வரிகள்தான் அவை. தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பாக மாணவி எழுதிய கடிதம் அது. வவுனியாவையே உலுக்கிய தற்கொலையின் பின்னணி என்ன என்பதை தேடியபோது, பதிலாக கிடைத்த கடிதத்தின் நெஞ்சைப்பிசையும் கடிதத்தின் வரிகள் அவை.



வவுனியா, பண்டாரிகுளம் விபுலானந்தா கல்லூரியில் உயர்தரம் கலைப் பிரிவில் கல்வி கற்று வந்த மாணவியே திவ்வியா. ஒரு அண்ணா, ஒரு அக்கா, தம்பி என அழகிய குடும்பத்தில் பிறந்த திவ்வியா சிறு வயதில் இருந்து கல்வியில் ஆர்வத்துடன் செயற்பட்டாள். ஆனால் அவளுக்கு இறுதி வரை கணிதம் மட்டுமே எட்டாக்கனியாக



இருந்தது. கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய திவ்வியா உயர்தரம் கற்பதற்கான சிறந்த பெறுபேற்றை பெற்ற போதும் கணித பாடத்தில் அவளால்சித்திபெறமுடியவில்லை. மற்றப்பாடங்களின் சிறந்த பெறுபேற்றை கவனித்த பாடசாலை நிர்வாகம், கணிதத்தை பின்னர் எடுத்து தருமாறு கூறி உயர்தரம் கற்பதற்கு அனுமதி கொடுத்தது.

தனது குடும்பம் வறுமைக்கு மத்தியிலும் என்னை கஸ்ரப்பட்டு படிக்க வைக்கிறது. நான் எப்படியாவது பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் படித்த திவ்வியா அதன் பின் நடந்த சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட பரீட்சையில் தோற்றிய போதும் அவளால் நல்ல பெறுபேற்றை பெறமுடியவில்லை. இருப்பினும் அவள் உயர்தரம் தொடர்ந்து கற்க அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகிய கல்விப் பொது உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருந்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைக்கு வந்தது. அனைவருக்கும் அனுமதி அட்டைகளை வழங்கிய விபுலானந்த கல்லூரி அதிபர் திவ்வியாவுக்கு மட்டும் அனுமதி அட்டையை கொடுக்க மறுத்தார். கணித பாடத்தில் சித்தி பெறாமையால் அனுமதி அட்டை தரமுடியாது என பதில் அளித்தார். இது திவ்வியாவை மனமுடைய செய்துள்ளது. பாடசாலையில் பல தடவை தனது அனுமதி அட்டையை கேட்டுள்ளாள். ஆனால் அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவள் கற்கும் பாடங்களில் ஒன்றாகிய தமிழ் பாட பரீட்சை கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமையே நடக்க இருந்தது. அதற்குள் தனது அனுமதி அட்டையை அதிபர் தந்து விடுவார் என நம்பியிருந்தாள். அதிபர் இப்படி கண்டிப்பு காட்டிவிட்டு இறுதியில் பரீட்சை எழுத அனுமதிப்பார் என நம்பினாள். ஆனால் அது நடக்கவில்லை. அவளது நம்பிக்கை விரயமானது.

இந்த விரக்தி அவளை விபரீதமாக முடிவெடுக்க வைத்தது. கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல். வீட்டில் இருந்து புறப்பட்டாள் திவ்வியா.

இருள் மெல்ல மெல்ல பரவத் தொடங்கியது. வழமையாக வேளைக்கு வீட்டுக்கு வந்துவிடும் திவ்வியாவை அன்று மட்டும் நீண்ட நேரமாகியும் காணாததால் தேடத் தொடங்கினர். அக்கம் பக்கம், நண்பர்கள் வீடு என எல்லா இடமும் தேடியும் திவ்வியா கிடைக்கவில்லை. இறுதியில் இரவு 7 மணியளவில் திவ்வியாவின் வீடு அமைந்திருந்த வேப்பங்குளம், 7ம் ஒழுங்கையில் வீட்டிற்கு அண்மையில் இருந்த பொதுக் கிணற்றில் திவ்வியா இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டாள்.

உடனடியாக பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலம் மீட்கப்பட்டு மரணத்திற்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணை நடைபெற்றது. இதியில் திவ்வியா எழுதி வைத்த கடிதம் சிக்கியது.

'கணித பாடத்தில் நான் சித்தியடையவில்லை என்பதால் எனக்கு பரீட்சை அனுமதி அட்டை தரமாட்டார்களாம். அம்மா என்னை கஸ்ரப்பட்டு செலவழித்து படிப்பீங்கிறீங்க. ஆனால் நான் பரீட்சை எழுத முடியாது. நான் ஏமமாற்ற விரும்பல. அம்மா இனி எனக்கு சாப்பாடு தீத்தி விடமாமட்டார்.எனக்குதூக்கமேவரவில்லை. உமையவன், கபிலன், மதுஜா நீங்கள் நல்லா படித்து பரீட்சை எழுதுங்கள். நான் உங்கள் எல்லோரையும் மிஸ்பண்ணுறன்' இது தான் திவ்வியாவின் இறுதி வரிகள்.

சடலத்தை பார்வையிட்ட வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநதான் கிசோர் சடலத்தை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு தெரிவித்தார். அதனடிப்பைடையில் வவுனியா வைத்திய சாலையில் இடம்பெற்ற மருத்துவ பரிசோதனையின் பின்னர் நீரில் திவ்வியா குதித்தமையால் நீரில் முழ்கி மரணமடைந்துள்ளதாக திடீர் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

சம்பவத்தையடைத்து தனது தொலை பேசிகளை அணைத்துவிட்டு பாடசாலை அதிபர் தலைமறைவாகி விட்டார். இந்த விடயம் வலயக்கல்வித் திணைக்களம் ஊடாக கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அதிபர் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார். தற்போது வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அனுமதி அட்டை விடயத்தில் பாடசாலை நடந்து கொண்ட விதம் சரியானாதா என்ற வினா எல்லோர் மனதிலும் எழுகின்றது. கல்விப் பொதுதராதர சாதரணதரப் பரீட்சையில் கணித பாடத்தை சித்தியடையாத பல மாணவர்கள் உயர்தரம் கற்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் அடுத்த வருடம் இடம்பெறும் பரீட்சையில் தோற்றி கணித பாட பெறுபேற்றை பெற்றுக் கொடுக்க வேண்டும்.இது கடந்தகாலவரலாறு. தவறினால் அவர்கள் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்படுவர். இது சாதாரணமாக நடைமுறையில் உள்ள விடயம். ஆனால் திவ்வியா பரீட்சை எழுதி கணித பாட பெறுபேறு வராத சந்தர்ப்பத்திலும் பாடசாலை தொடர்ந்து கற்க அனுமதி வழங்கியது மனித நேயமாக இருந்தாலும் அது அந்த பாடசாலை அதிபர் விட்ட தவறே. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பிய போது கணித பாடம் இல்லை என்பதால் விண்ணப்பத்தை அனுப்பாது குறித்த மாணவிக்கு ஆலோசனை வழங்கி அடுத்த வருடம் நடைபெறுவிருக்கும் பரீட்சைக்கு தோற்ற வைத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாது விண்ணபித்து அனுமதி அட்டை வந்ததும் அதனை வழங்காது விட்டது அதிபரின் தவறல்லவா? அந்த தவறான முடிவே இன்று திவ்வியாவின் இழப்புக்கு காரணமாகியுள்ளது.

கணிதபாடம் இல்லாது உயர்தரப் பரீட்சை எழுத முடியும். ஆனால் அந்த மாணவி பல்கலைக்கழக அனுமதியை பெறமுடியாது. அதை தெளிவுபடுத்தி பாடசாலை அனுமதி அட்டையை வழங்கியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தா ஆட்சிக் காலத்தில் கணிதத் துறையுடன் சம்மந்தப்படாத துறைகளை கணிதம் இல்லாது கற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திவ்வியா மட்டுமல்ல இன்று பல பாடசாலைகளில் இவ்வாறான நிலை இருக்கிறது. கணித பாடம் இல்லாத பலர் உயர்தரம் கற்க அனுமதிக்கப்படுவதும் அதன் பின்னர் அவர்கள் கணித பாட பரீட்சையில்

**பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். இன்னும் பல திவ்வியாக்களை இந்த மாணவர் சமூகம் இழக்க முடியாது. கணித பாடம் இல்லாது உயர்தரம் கற்கும் மாணவர்கள் தொடர்பாக கல்வி அமைச்சு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அதன் மூலமே மாணவர்களின் எதிர்காலத்தை காப்பாற்ற முடியும்**

தேற்றி சித்தியடையாத சந்தர்பத்தில் தொடர்ந்தும் கல்வி கற்க அனுமதிப்பது, பாடசாலையில் ஏதாவது குழப்பங்கள் ஏற்படுகின்ற போது அல்லது தமக்கு விரும்பிய நேரத்தில் அவர்களை இடைநிறுத்துவது என தொடர்கிறது இப் பிரச்சனை. குறிப்பாக வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியில் கடந்த மாதம் கூட 12 மாணவர்கள் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டனர். தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர்கள் இடைநிறுத்தப்பட்டமையால் மாணவர்கள், பெற்றோர்கள் குழப்பம் அடைந்தனர்.

இப் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். இன்னும் பல திவ்வியாக்களை இந்த மாணவர் சமூகம் இழக்க முடியாது. எனவே, கணித பாடம் இல்லாது உயர்தரம் கற்கும் மாணவர்கள் தொடர்பாக கல்வி அமைச்சு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அதன் மூலமே பல மாணவர்களின் எதிர்காலத்தை காப்பாற்ற முடியும் என்பதே உண்மை.

பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2015
வாய்மையே வெல்லும்
சிவநாதன் கிஷோர்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.)
9

தமிழர் விடுதலைக் கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு

## பதிலளிக்கிறார் சுமந்திரன்



இலங்கை நாடாளுமன்ற தேர்தலிலே என்றுமில்லாத அளவிற்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கை இம்முறை செலுத்துகின்றன. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுமந்திரன் தனது பேஸ்புக் பக்கத்தின் ஊடாக தன்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளித்து வருகின்றார். அவற்றில் இருந்து சில கேள்விகளுளையும் பதில்களையும் தொகுத்துள்ளோம்.

**கேள்வி:** நீங்கள் தமிழருக்கு என்ன செய்ய இருக்கின்றீர்கள்?

**சுமந்திரன்:** 2009 இல் இருந்த நிலைமையை விட இன்று தமிழர் விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. காணி விவகாரம், அரசியல் சூழ் நிலை, பொறுப்புக் கூறல் என எல்லாவற்றிலுமே மாற்றம் வந்திருகின்றது. இது எமது தலைமைத்துவத்தால் வந்த மாற்றங்களே. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது அடுத்த கட்டத் திட்டங்களை உறுதியாக முன்மொழிந்திருக்கின்றோம். சம்ஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி முறையினை அரசியல் தீர்வாகச் சொல்லியுள்ளோம். இதற்கு சர்வதேச ஆதரவு உண்டு. நீங்கள் வாக்களித்தால் அதையிட்டு கடந்த 5 ஆண்டுகளிலும் பார்க்க வினயமாகச் செயற்பட்டு இலக்குகளை அடைவோம்.



**சம்பூரில் 818 ஏக்கர், வலி வடக்கில் இன்னொரு 1000 ஏக்கர், முல்லைத்தீவில் 1000 ஏக்கர்தமிழ் நிலங்கள் மீளக் கையளிக்கப் பட்டிருக்கின்றது. தொடர்ந்தும் மீதமிருப்பவை விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.**

**கேள்வி:** இன்று தமிழ் கூட்டமைப்பு ஒரு புதிய போட்டியாளரை தேர்தலில் எதிர்கொள்ளும் நிலையில் அவர்களுக்கு எதிரான உங்களது சமூகவலைத்தளங்களூடான பிரச்சாரமானது போதுமானதாக இல்லை என்பது எனது கருத்து. இளைஞர்களை உங்கள் பிரசாரம் சென்றடைய என்ன செய்ய போகின்றீர்கள்? நாம் இயலுமான வரை எமது பிரச்சாரங்களை சமூக வலைத்தளங்களில் முன்னெடுத்தாலும் போட்டியிடும் வேட்பாளர்கள் நேரடியாக களமிறங்குவது முக்கியம். இப்போது நீங்கள் செய்வது போல மற்ற வேட்பாளர்களையும் செய்விக்க முடியுமா? உங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் என் போன்ற பல இளைஞர்களுக்கு கிடைக்கவில்லை. நாங்கள் அவற்றை தேடி போய் படிப்பது என்பது இருக்கும் வேலைப்பளுவில் முடியாத காரியம். எமக்கும் அவை இலகுவில் கிடைக்க வழி செய்ய முடியுமா?

**சுமந்திரன்:** எமது இளைஞர் அணியினைப் பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது, தம்பி. உங்கள் கருத்துடன் உடன்படுகின்றேன். இயன்றளவு உங்கள் நண்பர்களோடு உண்மைகளை விளக்குங்கள். எம்மிடம் இருக்கும் குறைந்த ஆட்பலமும் ஒரு காரணம் தான். வரும் கிழமைகளில் எமது குறைகளைத் திருத்தத் தெண்டிப்போம்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்த இணைய இணைப்பில் பார்க்கலாம்

http://www.tamilwin.com/data/docs/General_Election_Manifesto_2015_Tamil.pdf

**கேள்வி:** வணக்கம், நான் உசன் பிரதேசத்தைச் சார்ந்தவன். நீங்கள் எங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராக தொடர்ந்து குரல் கொடுப்பீர்களா? நீதி, பொறுப்புக் கூரல் என்பவை தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

**சுமந்திரன்:** நாம் தான் சர்வதேச விசாரணையைக் கொண்டு வந்தோம். அதன் அறிக்கை செப்டம்பர் மாதம் வெளிவர இருக்கின்றது. அதன் பால் பொறுப்புக் கூறல் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளுக்குச் செல்வோம். நாம் அநீதிகளுக்கெதிராக வெறும் கோஷம் மட்டும் எழுப்பவில்லை. பல அநீதிகளுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்துப் போராடி வென்றும் இருக்கிறோம். தொடர்ந்து செய்வோம். உங்கள் வாக்குக்கும், ஆதரவுக்கும் நன்றி. பாரளுமன்ற உறுப்பினராக என்னாலான உதவிகளை உசன் மக்களுக்குச் செய்வேன்.

**கேள்வி:** ஆட்சியில் பங்கேற்க கோரும் அரசிடம் உங்கள் கோரிக்கை என்னவாக இருக்கும்? சுன்னாகம் கழிவு ஓயில் குடிநீரில் கலந்தமைக்கு என்ன தீர்வு, மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க இயலுமா? இராணுவம் அகற்றி மக்களுக்கு கொடுக்ககூடிய காணிகள் பற்றி உறுதியளிக்க முடியுமா?

**சுமந்திரன்:** எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது சமஷ்டிக் கோரிக்கையைத் தெட்டத் தெளிவாகச் சொல்லியுள்ளோம். அரசிடம் வைக்கும் கோரிக்கையும் அதுவே. இவ் விடயம் குறித்து நாம் சர்வதேச அழுத்தத்தையும் தொடர்ந்து பயன்படுத்துவோம். எமது இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும்.

சுன்னாகம் நீர் பிரச்சினையை நாம் எமது கருத்தில் கொண்டிருக்கிறோம். இது அரசியல்வாதிகளால் தலையீடு செய்து குழப்ப வேண்டிய விடயம் அல்ல. இது குறித்த துறை சார் நிபுணர்களால், குறித்த அதிகாரிகளுடன் சேர்ந்து ஆராய்ந்து தீர்க்கப்பட வேண்டிய விடயம். நாம் ஒரு போதும் சரியான நடவடிக்கைகளுக்கு தடங்கலாக இருக்கமாட்டோம். அதை வலுப்படுத்துவோம். விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம்.

காணிப் பிரச்சினை குறித்து நான் பாராளுமன்றத்திலும், நீதிமன்றத்திலும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கின்றேன். புதிய அரசின் கீழ் சில முன்னேற்றங்கள் நடைபெற்றுள்ளன. சம்பூரில் 818 ஏக்கர், வலி வடக்கில் இன்னொரு 1000 ஏக்கர், முல்லைத்தீவில் 1000 ஏக்கர் தமிழ் நிலங்கள் மீளக் கையளிக்கப் பட்டிருக்கின்றது. தொடர்ந்தும் மீதமிருப்பவை விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

**கேள்வி:** Sir, what do you think about TNPF campaign?

**சுமந்திரன்:** என்னைத் திட்டுவது மாத்திரமே அவர்களது திட்டம் போலும். வேறென்னத்தைச் சொல்றது.

**கேள்வி:** சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு என்பது தொடர்பில் த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

உங்கள் கேள்விக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் எல்லோரும் புரியும் வண்ணம் விளக்கம் கொடுத்துள்ளோம். தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதுபற்றி நாங்கள் விளக்கம் கொடுப்பது இதுவே முதல் தடவை அல்ல. முன்னைய காலங்களிலும் தமிழ் மக்கள் சர்வதேச மரபுகளுக்கு அமைய ஒரு தேசிய இனத்திற்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டவர்கள் என்பதால் தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனமெனவும், அந்த அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்என்பதையும் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முதல் மாநாட்டில் (1951 ஏப்ரல் 13 14) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் "பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வோர் இனத்துக்கும் பிரிக்கவொண்ணாத உரிமை உண்டென்பதாலும் அவ்வுரிமையின்றி அவ்வினத்தின் ஆன்மீக, காலாசார, தார்மீகப் பொலிவு சீரழிந்து விடும் என்பதாலும்அவர்கள்தனிஇனமாக விளங்குகிறார்கள் என்பதாலும்... இலங்கைத் தமிழ்பேசும் இனத்திற்கென பிரிக்க முடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதுடன், அடிப்படையானதும் மறுக்கவொண்ணாததுமான சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கிசைய மொழிவாரி அரசுகள் உருவாக்கப்பட வேண்டும்" எனக் கோரியது.

2002 டிசம்பரில் எழுதப்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையும் "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்" என்ற அடிப்படைக் கோட்பாடுகளையிட்டு இணக்கம் காணப்பட்டன என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**கேள்வி:** தமிழ் ஈழ விடுதலை புலிகள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு? அவர்கள் பயங்கரவாதிகளா? நேரடியான பதில் என்ன?

2014ஆம் ஆண்டில் நான் ரவிராஜ் நினைவுரையில்கூறிய கருத்துக்களை நீங்கள் www.tnapolitics.org என்ற இணையத்தளத்தில் வாசிக்கலாம்:

நான் அங்கே பின்வருமாறு கூறினேன்:

"இன்று எமது சூழ்நிலையில் வன்வலுவுக்கு இடமில்லை. நான் சொல்வதை எவரும் தவறாக விளங்கக்கூடாது. எமது சரித்திரத்திலே வன்வலுவுக்கு ஒரு போதும் இடம் இருக்கவில்லை என நான் கூறவில்லை. அதை முன்னெடுத்தார்கள். மிகவும் தீவிரமாக முன்னெடுத்தார்கள். அது பிழை என்று நான் சொல்ல வரவில்லை. அது அந்த காலத்தில் அந்த சூழ்நிலையில் எடுத்த தீர்மானம். அந்த தீர்மானம் திறம்பட பல தசாப்தங்கள் முன்னெடுக்கப் பட்டது. அதிலே தங்களை மாய்த்துக்கொண்டவர்கள் ஏராளம். அவர்கள் எமது நினைவுகளிலே நீங்காத இடத்தை பெறுகின்றார்கள் ஏனென்றால் தங்களுக்காக அல்ல, எங்களுக்காக தங்களுடைய உயிர்களை மாய்த்தவர்கள்.

அந்த செயற்பாடு ஒரு போதும் எமது சரித்திரத்தில் கொச்சைப்படுத்தப்பட முடியாதது. அது போற்றப்பட வேண்டும்.

ஆனால் இன்றைய சூழ்நிலையிலே எமது போராட்டத்தை, உரிமை முன்னேற்றதை எவ்வாறு அடைய போகிறோம் என்ற கேள்வியை அரசியல் தலைவர்கள் கேட்டு பொறுப்பாக செயற்பட வேண்டும். மென்வலு ஒன்று தான் எங்களிடம் இருக்கின்ற ஆயுதம். வன்வலு இருக்க வேண்டும் என்று விரும்பினாலும், அது இல்லை. அது தான் உண்மை

**கேள்வி:** முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களினாலும் தமிழ் மக்களினாலும் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் "இரண்டாம் மட்டத் தலைவர்களை இளம் தலைவர்களை தமிழ்த் தேசிய அரசியலின் முக்கிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கவில்லை. அல்லது, அதனை மூனைப்போடு செய்யவில்லை" என்கிற குற்றச்சாட்டுத் தொடர்பில் என்ன கூற விளைகின்றீர்கள். அது தொடர்பிலான எதிர்கால திட்டங்கள் என்ன?

**சுமந்திரன்:** உங்கள் கருத்தில் நிச்சயமாக உண்மை இருக்கின்றது. ஆனால், எமது மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் இளைய சந்ததியினர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். வடமராச்சியில் தமிழரசுக் கட்சிக்காக வேலை செய்பவர்கள் பலரும் இளைஞரே. தமிழரது அரசியற் கட்டமைப்புக்களை மீளப் புதுப்பிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நீண்ட கால இடைவெளிக்கு முனைப்பான அரசியல் ஈடுபாடு எமது மக்களிடம் இருக்கவில்லை. இப்போது ஆரோக்கியமான மாற்றங்கள் இருக்கின்றது. இளைஞர் அணியைப் பலப்படுத்த வேண்டும். முதலில் இளைஞரிடையே சரியான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசியல் ஈடுபாட்டைக் கொண்டு வரவேண்டும். கேட்கும் வாலிபர்கள் எல்லாம் நாட்டை விட்டு வெளிநாடு செல்வதையே விரும்பும் காலகட்டத்தில் இது சவாலான ஒன்று. சரியான கல்வியும், வேலைவாய்புக்களும் கூட உங்கள் கேள்வியோடு தொடர்புபட்டவை தான். இயன்றளவு இந்த விடயம் தொடர்பில் எமது குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சிப்போம். நன்றி.

# மாசிப்புதனும் ஏழு கன்னிகளும்



பி.சியா
siyapj27@gmail.com



மாசி மாதம் என்றாலே நாச்சிமார் எனப்படும் அம்மனை சாட்டு வைத்து வளர்க்கப்பட்டிருக்கும் மரபு வழிக்குள் கட்டுண்டு கிடக்கின்றது இருபாலை கிராமம். வயல்கள் குளங்கள் சூழப்;பெற்ற இயற்கை அழகு கொழிக்கும் அழகான கிராமம் இது. இந்த கிராமத்தவர்களின் மரபு வழி வந்த நம்பிக்கை வழிபாட்டு முறை தான் மாசிப்புதன். எந்த ஆலயத்திலும் இல்லாத விசேடமான வழி முறை இது. கர்ண பரம்பரை கதைகளின் படி வளர்ந்து வந்த சம்பிரதாயங்கள் இன்றும் நீடித்து வாழ்கின்றன என்பதற்கு இது போன்ற விடயங்கள் உதாரணமாகும்.

சக்தியினுடைய ஒரு அவதாரம் நாச்சிமார் என்பதும் . அந்த நாச்சிமாருக்கு ஏழு கன்னிகள் உள்ளனர் என்பதும் கர்ணபரம்பரை கதைகளே. அதனை இன்றும் நம்பியோ நம்பாமலோ ஏதோ ஒரு மனப்



மாரிமுத்து

பயத்தோடு வழிபட்டு மரபுகளை கடைப்பிடிக்கம் பல நாச்சிமார் ஆலயங்கள் உள்ளன. ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு முறையில் ஏழு கன்னி வழிபாடு இடம்பெறும் .

ஆனால் மாசிப்புதனுக்கு பிரபல்யம் வாய்ந்த நாச்சிமார் என்றால் அது இருபாலை கிராமத்தின் கிழக்கே ஒரு வெட்ட வெளி தரவையில் அமைந்துள்ள நாச்சிமார் தான். இந்த கோவிலின் வழிபாட்டு முறை மற்றும் வரலாற்றையும் மாசிப்புதனின் நம்பிக்கையையும் அந்த ஆலயத்தின் பூஜை வழிபாட்டு பரம்பரையில் உதித்து வந்த கணேசபிள்ளை மாரிமுத்து (வயது 72) ஐதீக நம்பிக்கைகளும் யதார்த்தமும் தித்திக்க பேசுகின்றார்.

நச்சிமார் என்பது எமது குல தெய்வம். கடவுள் நம்பிக்கைக்குள்ளும் பண்பாட்டுக்குள்ளும் கட்டுண்டு வாழ்ந்த மண் நமது யாழ்ப்பாண மண். எனவே எமது மக்களிடம் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு குல தெய்வம் உண்டு. அந்த குல தெய்வங்கள் உண்மையானவை. அந்த தெய்வங்கள் இல்லையென்றால் நமது மண் இத்தனை பிரச்சினைகள் மத்தியிலும் நிலைத்து இருக்க முடியாது.

ஆரம்ப காலம் தொடக்கமே நமது பூட்டன் பூட்டிமார் வளர்த்து வந்த மரபுகள் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது தான். அவ்வாறான ஒரு மரபு வழிபாடு தான் நச்சிமாரின் மாசிப்புதன். நாச்சிமார் சுடலையை பார்த்த படி அமர்ந்துள்ளார். இங்கு ஆரம்ப காலத்தில் நித்திய பூஜை இடம்பெறுவதில்லை. மாசி மாதத்தில் வருகின்ற புதன் கிழமைகளில் விளக்கு வைக்கத்தான் மக்கள் செல்வார்கள். கண்ட கண்ட நேரங்களில் செல்வதில்லை. ஏனென்றால் நாச்சிமார் வெட்ட வெளியில் சுடலையோரம் அமர்ந்திருப்பதால் மக்களிடம் ஒரு பயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் இப்போ எல்லா ஆலயங்களையும் போலவே இங்கும் நித்திய பூஜைகள் இடம் பெறும். 10 நாள் விசேட திருவிழாவும் இடம் பெறும். மாசி மாதத்தில் வருகின்ற நான்கு புதன் கிழமைகளும்தான் இந்த ஆலயத்துக்கு விசேடமான நாள். இதனை ஊர் மக்கள் மாசிப்புதன் என்று அழைக்கிறார்கள். மாசிப்புதன்களில் முதல் மூன்று புதனும் விளக்கு வைத்து சாதாரண பொங்கல் செய்து படைப்பது வழக்கம்.

மாசிப்புதன் கடைசி நாள் அன்று ஆலயத்திற்கு ஏழு கன்னிகள் வருகிறார்கள் என தொன்று தொட்டு மரபாக வளர்க்கப்பட்ட கதை இதை. இதை ஊர்மக்கள் இன்றும் நம்புகிறார்கள். மாசிப்புதன் தொடங்கினால் ஊர் மக்கள் அனைவரும் விரதம் இருக்க ஆரம்பித்து விடுவார்கள். மாசிப்புதனின் இறுதி நாள் ஊரே திருவிழாக்கோலம் பூண்டுவிடும். முதல் நாள் இரவே ஊர் மக்கள் அனைவரும் ஆலயத்தில் ஒன்று திரளுவார்கள். அந்த ஊரிலிருந்து திருமணம் முடித்து வெளியூரில்வசிப்பவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்து விடுவார்கள்.



இரவிரவாக பலகாரங்கள் சுடப்படும். சமையல்கள் தயாராகும். மறு நாள் அதிகாலை 6 மணியளவில் படையல்கள் இடம் பெறும். இந்த சமையலினை ருசிக்க ஏழு கன்னிகள் வருவர் என்பது நம்பிக்கை.. இந்தப் படையலின் விசேடம் என்னவென்றால் இரவிரவாக செய்யும் உணவுப் பொருட்களை எல்லாம் ஊர் ஆண்கள் சுளகில் படைத்து எடுத்துக் கொண்டு நச்சிமாரின் எதிரே உள்ள கடலை நோக்கி புறப்படுவார்கள். இவர்களிற்கு தலைமை தாங்கிச் செல்வது கோவிலின் தர்மகர்த்தா. புறப்படுவதற்கு முன்னர் பூசாரியால் பூசிக்கப்பட்ட கூரிய வாள் ஒன்று அவரிடம் வழங்கப்படும். அத்துடன் பூசணிக்காய், இளநீர் என்பவற்றையும் எடுத்து கொண்டு சுளகில் படையல்களோடுநிற்கும் அந்தபகுதி ஆண்களுக்கு தலைமை தாங்கிச் செல்வார். இவர்கள் சுடலையின் அருகேகடலோரம் சென்று பூசணிக்காயை வெட்டி இளநீர் வெட்டி, அதன் பின்னர் கொண்டு சென்ற படையல்களை எல்லாம் படைத்து விட்டு திரும்பி பார்க்காமல் கோவில் நோக்கி வருவார்கள்.

இந்தப் படையல் செய்வதன் காரணம், இரவில் சமையல் செய்யும் பொழுது அந்த இடத்தில் ஏழு கன்னிகள் வந்து நிற்பதாகவும், அவர்களை கொண்டு போய் விடுவதற்காகத்தான் அந்த படையல் செய்கிறார்களாம்.

படையல் படைத்து விட்டு வரும் பொழுது யாராவது திரும்பி பார்த்தால் இரத்தம் கத்தி சாவார்கள் என்று கூட ஒரு கதையுண்டு. ஆனால் இன்று சின்னஞ் சிறுசு எல்லாம் வழி வெட்ட சென்று வருகின்றது. ஆனால் பெண்கள் போவதில்லை. அவர்கள் செல்லாததற்கும் காரணம் உண்டு. அவர்கள் சென்றால் கன்னிகள் தொத்தி விடும் என்ற பயம் தான்.

இது பொய்யில்லை. நான் வாழுகின்ற இந்த காலத்தில் நடந்த உண்மை ஒன்று உள்ளது. நாச்சிமாருக்கு பின்னாலே அமைந்துள்ள மண்டக்களத்திலே யாராவது பெண்கள் துடக்குடன் சென்று நீராடினால் அவர்களுக்கு ஏதும்அசௌகரியம் நடக்கும். துடக்குடனோ மதிய வேளையிலோ இந்த ஆலய வீதியில் சென்றால் ஏதும் தீங்கு நடக்கும். ஆகையால் பெண்கள் இன்றும் சிறிய பயத்துடன் தான் வாழ்கின்றனர்.

பெண்மணியொருவர் துடக்குடன் கன்னிக்கு முன்பாக சென்றுள்ளார். அவரை கன்னி பிடித்துவிட்டது. உடனே அவருக்கு பயித்தியம் பிடித்து விட்டது. ஏழு கன்னியோ அல்லது ஆலயத்தில் வைரவரோ தொற்றியதாக ஊரில் கதைத்துக் கொள்கிறார்கள். என்றாலும், மாரிமுத்து சிறிது யதார்த்தமாக பேசுகிறார். துடக்குடன் சென்றதால்த்தான் அந்த பெண்மணிக்கு மனநிலைப்பாதிப்பு ஏற்பட்டதென அவர் நம்பவில்லை. அதற்கு வேறுகாரணங்களும் இருக்கலாமென நினைக்கிறார்.

ஆனால் மாசிப்புதன் என்பது எமது ஆலயத்திற்கு மிக முக்கியமானது. அது தலைமுறை தலைமுறையாக இந்த ஊரில் நீடித்து வரும் நம்பிக்கை. அவர்களை பொறுத்தவரை மாசிமாதம் நாச்சிமாருக்கே உரித்தான மாதம்.

இந்த மரபுவழி வழிபாடு தான் இன்று பலரை ஆலயத்தினை எட்டி பார்க்க வைக்கின்றது. இதுவும் இல்லை என்றால் மக்கள் ஆலயத்தினையே மறந்து விடுவார்கள் என்கிறார்கள் ஊரவர்கள்.

எமது பண்பாடு கலாச்சாரங்களை கட்டிக் காப்பவை இப்படியான நம்பிக்கைகள்தான். அதனை நம்பினார்களோ இல்லையோ எமது முன்னோர்கள் மரபை கட்டிக் காத்து ஊரின் பெருமையை பண்பாட்டை நிலைக்க வைக்க வேண்டும். இனி வரும் தலைமுறையும் இதனை தொடர வேண்டும் என நம்பிக்கையும் சிறிது யதார்த்தமும் நிலைக்க பேசினார் அந்த

**மாசிப்புதன் என்பது எமது ஆலயத்திற்கு மிக முக்கியமானது. அது தலைமுறை தலைமுறையாக இந்த ஊரில் நீடித்து வரும் நம்பிக்கை. அவர்களை வொறுத்தவரை மாசிமாதம் நாச்சிமாருக்கே உரித்தான மாதம்**

ஆலயத்தின் பரம்பரை வழி வந்த மாரிமுத்து அம்மையார்.

ஊரிலிருந்து வெளியேறும்போது, தலைமுறைகளாக கடத்தப்பட்டு வந்த நம்பிக்கைகள், ஐதீகங்கள் தான் என்பவற்றால் கட்டியமைக்கப்பட்ட பண்பாடு, கலாசாரங்களின் எச்சங்கள் ஊர்முழுவதும் படிந்திருந்ததை காணமுடிந்தது. ஐதீகங்களின் விஞ்ஞானபூர்வதன்மைகளை முழுமையாக யாரும் ஆராய்வதில்லை. அனைத்தையும் விஞ்ஞானபூர்வமாக பார்த்தால், வாழ்வின் சுவாரஸ்யம் இழக்கப்பட்டு விடும் என்பது உண்மைதான்.

சோதிடம்

உங்களின் குழந்தைக்கான புதிய குறிப்பு எழுதுதல் மற்றும் குறிப்பு பாரத்தல்
திருமண பொருத்தம் பாரத்தல் இவற்றுடன் புதிய வீடு கட்டுதல் ,கட்டிடங்கள் அமைத்தல்
போன்றவற்க்கு நிலையம் எடுத்தலும் மற்றும் குடிபுகுதலுக்கான நல்ல நாள் பார்த்தல் போன்ற சேவைகளுக்கு ...!



சோதிடர் சி. இராசநாயகம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
இல.07 பாடசாலை
சுற்று வட்ட வீதி,
மகாறம்பைக்குளம், வவுனியா.
0776147392

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இணைய ஜன்னல்

**Neethujan Bala**
நாள் முழுவதும் சும்மா
இருப்பது என்பது சின்ன
வேலை இல்லை... அதைச்
செய்வதற்கு ஒரு முழு
நாள் தேவைப்படுகிறது.

**Janu Siva**
சமத்துவம் என்பது
சாதியை மறத்தலோ
மறைப்பதோ இல்லை.
அது எமது வரலாற்றை
மறப்பதுக்கும்
மறைப்பதற்கும் சமன்.
சாதியை தைரியமாக
சொல்லி எந்த வேறுபாடும்
இல்லாமல் இருப்பதே
உண்மையான சமத்துவம்.

**Jamsith Zaman**
சவப்பெட்டி விற்பவனின்
கண்கள்
யாருடையமரணத்தையோ
விரும்புகின்றது

**கு.விநாயக மூர்த்தி**
எவ்வளவுதான்
உண்மை பேசுனாலும்
அதை பொய்யின்னு
சந்தேகமாகவேப் பாக்குறது
காதலி...
எவ்வளவு பொய்
சொன்னாலும்
,அதை உண்மைன்னு
நம்புறமாதிரியே நடிக்கிறது
அம்மா...

**anapathipillai Prapakaran**
நாம் வாழனும்னா
எத்தனை பொண்ணை
வேனும்னாலும்
காதலிக்கலாம் ஆனால்
சாவனும்னா ஒரே ஒரு
பொண்ணை கல்யாணம்
கட்டிக்கிட்டாப் போதும்.
**wink emoticon**

# தீர்வை நோக்கி ஒன்று திரளுங்கள்

மே 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்மக்களுக்கு இருக்கிற ஓரே அரசியல் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) விளங்கி வருகிறது. 2010 இல் நடந்த நாடாளு மன்றத் தேர்தலிலும் அதற்குப் பின்னரும் நடந்த தேர்தல்களிலும் தமிழ்மக்கள் ததேகூ க்கே ஆதரவு தெரிவித்து வந்திருக்கிறார்கள். இந்த ஆதரவு தேர்தலுக்குத் தேர்தல் வளர்பிறையாக வளர்ந்து வந்துள்ளதை கீழ்க்கண்ட அட்டவணை எடுத்துக்காட்டு கிறது.

| ஆண்டு | தேர்தல் | வாக்குகள் | விழுக்காடு | இருக்கை |
|---|---|---|---|---|
| 2010 | சனாதிபதி தேர்தல் வட கிழக்கு (பொன்சேகா) | 571,067 | 62.34 | |
| 2010 | பொதுத் தேர்தல் | 65,119 | 43.85 | 14 |
| 2011 | உள்ளூராட்சி தேர்தல் | 255,078 | 63.00 | 275 (32 பிரதேச சபை) |
| 2012 | கிழக்கு மாகாண சபை | 193,807 | 30.59 | 11 |
| 2013 | வட மாகாண சபை | 353,595 | 78.48 | 30 |
| 2015 | சனாதிபதி தேர்தல் வட கிழக்கு (சிறிசேனா) | 978,111 | 72.01 | |

மக்கள் அளித்த பேராதரவு காரணமாக இன்று சர்வதேச சமூகம் தமிழ்மக்கள் சார்பாகப் பேசக் கூடிய கட்சியாக ததேகூ யை அங்கீகரித் துள்ளது. தமிழ்மக்கள் தொடர்பான அரசியல், மனித உரிமை சிக்கல்கள் பற்றி இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய இராஜ்சியம், ஐரோப்பிய ஒன்றியம், தென்னாபிரிக்கா, சுவிஸ் போன்ற நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை இராஜதந்திரிகள் ததேகூ உடன்தான் பேசுகிறார்கள்.

கடந்த சனவரி 8 ஆம் நாள் நடந்த சனாபதி தேர்தலில் தமிழ்மக்கள் ததேகூ இன் வேண்டுகோளுக்கு இணங்க மைத்திரிபால சிறிசே னாவை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் இலங்கை அரசியலில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி னார்கள். ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்துக்கு அத்திவாரம் இட்டார்கள். இராஜபக்ச நடத்திய குடும்ப ஏதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். நாட்டில் நல்லாட்சி பிறக்க வழிசமைத்தார்கள். சட்டத்தின் ஆட்சி, பேச்சுச் சுதந்தரம், எழுத்துச் சுதந்திரம் போன்றவற்றை மதித்து நடக்கிற ஒரு சனநாயக ஆட்சி இப்போது ஆட்சியில் உள்ளது.

தமிழ்மக்களைப் பொறுத்தளவில் வெள்ளைவான் கடத்தல், கிறீஸ் பூதம், கழிவுஎண்ணெய் வீச்சு, நாய்களின் தலைகளை வெட்டி வீட்டு வாசலில் நட்டு வைக்கும் கெடுபிடிகள் நின்றுவிட்டன.

வலிகாமம் வடக்கில் தமிழர் களிடம் இருந்து இராணுவம் பறித்த 6,382 ஏக்கர் காணியில் 1,033 ஏக்கர் காணி திருப்பி சொந்தக்காரர்களுக்கு கையளிக்கப் பட்டுள்ளது. சம்பூரில் இராணுவம் பறித்த 816 ஏக்கர் காணி அதன் சொந்தக்காரர்களிடம் திருப்பி கையளிக்கப்பட்டுள்ளது. கடற்படை 237 ஏக்கர் காணியில் உருவாக்கிய முகாமை வேறு இடத் துக்கு மாற்ற சம்மதம் தெரிவித் துள்ளது. நீண்ட, இடைவிடாத போராட்டம் காரணமாகவே இந்தக் காணிகள் மீட்கப்பட்டன.

**தேர்தலைப் புறக்கணிப்பதையும் குறை சால்வதையும் குற்றம் கண்டு பிடிப்பதையும் தமிழர்களின் ஒற்றுமையை சிதறடித்து சின்னாபின்னமாக்கும் கட்சிக்கு வாக்களித்து உங்கள் பொன்னான வாக்குகளை மண்ணாக்க வேண்டாம்**

இருந்தும் வலிகாமம் வடக்கில் எஞ் சிய 5,349 ஏக்கர் காணி தொடர்ந்தும் இராணுவத்தின் பிடியில் உள்ளது. இது விரைவில் மீட்டெடுக்கப்பட வேண்டும்.

மேலும் அரசியல் கைதிகளது விடுதலை, 89,000 கைம்பெண்களின் மறுவாழ்வு, காணாமல் போனோர் பற்றிய விசாரணை போன்ற சிக்கல்களுக்கு எதிர்காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும்.

கடந்த தேர்தல்களில் வாக்களித்தது போன்று இந்தத் தேர்தலிலும் நாடாளுமன்றப் பிரதிநித்துவத்தை அதிகரிக்க தமிழ்மக்கள் ததேகூ க்கு வாக்களிக்க வேண்டும். ஆயுத பலத்தை இழந்து போன எங்களுக்கு இருக்கும் ஒரே பலம் வாக்குரிமையாகும். இதனை மக்கள் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி இருபதுக்கும் குறையாத ததேகூ வேட்பாளர்களை தேர்தலில் வெற்றிபெறச் செய்ய வேண்டும். அதன் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு உரத்த செய்தியைச் சொல்ல வேண்டும்.

அடுத்த ஆண்டில் எப்படியும் தமிழர்களது நீண்ட கால இனச் சிக்கலுக்கு தீர்வு கண்டேயாக வேண்டும். இனச் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் தென்னிலங்கை கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை காணப்படுகிறது. எப்படியான தீர்வு என்பதில்தான் அந்தக் கட்சிகளுக்கு இடையே முரண்பாடு நிலவுகிறது.

மகிந்த இராஜபக்சா 13 ஏ சட்ட திருத்தத்துக்கு அப்பால் போகாமல் இனச்சிக்கலுக்கு தீர்வு காணப்படும் என்கிறார். இரணில் விக்கிரமசிங்கி மாகாண சபைகளுக்குக் கூடிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனச் சிக்கலுக்கு தீர்வு காணப்படும் என்கிறார்.

ததேகூ "ஒன்றுபட்ட வடக்கு கிழக்கு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்பிற்குள்ளே அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற் கொள்ளப்படும் அனைத்து அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்து டையவர்கள். இது வடக்குகிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்" எனக் கேட்கிறது.

இராணுவம் ஆக்கிரமித்த தனியார் காணிகளை மீட்பதில் பெரும்பங்காற்றியவரும், ஜெனிவா வில் அமெரிக்கா சிறிலங்கா நாட்டுக்கு எதிராகக் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானங்களின் பின்னால்பாடுபட்டவரும் மும்மொ ழிப் புலமை வாய்ந்தவரும் அரசியல் யாப்பு மன்றும் மனித உரிமை சட்டத்துறைகளில் வல்லவருமான சட்டத்தரணி மா.அ. சுமந்திரனுக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள். அவரின் சேவை எமக்குத் தேவை.

உங்களது வாக்குகளை சுயேட் சைகளுக்கும், தென்னிலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள கட்சிகளுக் கும் குறிப்பாக தேர்தலைப் புறக் கணிப்பதையும் குறை சால்வதையும் குற்றம் கண்டு பிடிப்பதையும் தமிழர்களின் ஒற்றுமையை சிதறடித்து சின்னாபின்னமாக்கும் கட்சிக்கு வாக்களித்து உங்கள் பொன்னான வாக்குகளை மண்ணாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

தாயகத்தில் உள்ள எமது உறவுகள் ததேகூ இன் வேட்பாளர்களுக்குத் வாக்குகளை அளித்து அவர்களை பெருவெற்றிபெறச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள் கிறோம்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



கடந்த செவ்வாய்க்கிழமை நிந்தாவூர் கடலில் மீனவர் ஒருவரின் வலையில் தொகையாக கீரிமீன்கள் சிக்கின. சிக்கிய அனைத்து மீன்களும் கீரிமீன்கள். இவற்றின் பெறுமதி சுமார் நான்கரை இலட்சம் ரூபா. இதனை பெருமளவான மக்கள் பார்த்து சென்றனர்.



# உங்கள் கைகளில் உங்கள் முகம்

நான் அழகா இருக்கேனா இல்லையா? என் முகத்தில் ஏன் இப்படி பரு வந்திருக்கு? என் நண்பியோட முகம் மட்டும் இவ்வளவு அழகா இருக்கே என்று தினம் தினம் அழகைப் பற்றி சிந்திக்காத பெண்கள் மிக அரிது. சிந்தனை முழுதும் அழகைப்பற்றி சிந்திக்கும் பெண்களே.. உண்மையில் அழகிற்கு முதல் தேவை நமது தேவையற்ற சிந்தனைகளை நிறுத்துவது . அடுத்து தேவை எம் மனதையும் உடலையும் சுத்தமாக வைத்திருப்பது. அடுத்து இளமையை சரியான முறையில் பராமரிப்பதே.

இன்றய காலத்தில் அதிகமான பெண்கள் வேலைக்கு செல்பவர்கள். இவர்களுடைய எதிர்பார்ப்புதங்கள் முகம் எப்பவுமே மினு மினுப்பாக பருக்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே. இவர்களின் ஆசைக்கு அப்பால் பருக்கள் இவர்களை விட்டுவைப்பதில்லை. அதுவும் இளம் பருவத்தினர்தான் அதிகம் இந்த பருத்தொல்லைக்கு உள்ளாகிறார்கள்.

பருவ வயதில் மட்டும் ஏன் இந்த முகப்பரு தோன்றுகிறது என்றால், அந்த வயதில் மட்டும் தான் உடலில் இருக்கும் எண்ணெய் சுரப்பிகள் அதிக அளவு சுரக்கும். இவ்வாறு அதிகமாக சுரக்கும் எண்ணெய், முகங்களின் ரோமக்கால்களின் வழியாக வெளியேறும் போது அவை முழுமையாக வெளியேற வழியில்லாமல் தடைப்பட்டு முகப்பருவாக உருமாறுகிறது. இந்த பருக்களை நகத்தால் கீறினாலோ, அழுக்குத் துணியால் முகத்தை துடைத்தாலோ இன்பெக்ஷன் ஏற்பட்டு முகப்பரு கட்டிகள் ஏற்படுகிறது. இதற்கு ஆங்கில மருத்துவ பெயர் 'அக்னே' எனப்படும்.

இதை 4 கட்டங்களாக பிரிக்கிறார்கள். முதலில் புள்ளிகள் போல 4, 5 பருக்கள் முகத்தில் தோன்றுவது, முகப்பருவில் சீழ்பிடித்து கட்டி வரத் தொடங்குவது, அவை பெரிதாகி மிக கடினமாக மாறிவிடுவது, இவை மேலும் முற்றிவிட்ட நிலையில் எவ்வித கிசிக்சையும் எடுக்காமல், முகப்பருவை கிள்ளிக் கொண்டே இருந்தால் 4வது கட்டமாக முகத்தில் ஏராளமான நிரந்தர தழும்புகள் வந்துவிடும். முகப்பருக்கள் வராமல் தடுக்க எண்ணெய், வெண்ணெய், நெய், கொழுப்பு, இனிப்பு, காரம் போன்றவற்றை சாப்பிடக் கூடாது. உணவில் அதிக அளவு காய்கறி, பழங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

முகப்பரு வந்த பின்பு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினாலே போதும். ஒரு நாளைக்கு 4 முறை முகத்தை கழுவ வேண்டும். எந்த சோப்பையும் உபயோகிக்கலாம். ஆனால் அது ஒரே சோப்பாக தொடர்ந்து இருக்க வேண்டும். ஒவ்வொரு சோப்பிலும், ஒருவித கெமிக்கல் கலக்கப்பட்டு இருக்கும். நாம் சோப்பை அடிக்கடி மாற்றினால் முகத்தோல் அந்த கெமிக்கல் கலவைகளால் பாதிக்கப்படும். இவற்றை முறையாக செய்தாலே முகத்தில் பரு என்பதே தோன்றாது.

### ஆவிபிடித்தல்

சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளைப் போக்க ஆவிப்பிடிக்க வேண்டும். ஆவிபிடித்தால் சருமத்துளைகள் திறந்து, சருமத்துளைகளில் தங்கியுள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்களை தளர்ந்துவிடும். இதனால் ஆவிபிடித்த பின் கொட்டன் கொண்டு முகத்தை துடைத்தால், பருக்களை உண்டாக்கும் மாசுக்கள் மற்றும் இறந்த செல்கள் முற்றிலும் வெளிவந்துவிடும்.

### கிராம்பு

கிராம்பும் பருக்களை போக்கக் கூடிய பொருட்களில் ஒன்றாகும். அதற்கு கிராம்பை நீரில்போட்டு கொதிக்கவிட்டு, குளிரவைத்து, பின் அதனை அரைத்து, பருக்கள் உள்ள இடங்களில் தடவி, 15அல்லது 20 நிமிடம் ஊறவைத்து, குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும்.

### முகத்தை கழுவவும்

அடிக்கடி முகத்தை கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் படியும் அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள், எண்ணெய் சுரப்பிகளில் இருந்து வெளியேறும் எண்ணெய்களில் கலந்து, முகப்பரு மற்றும் பிம்பிளை உருவாக்குவதில் இருந்து தடுக்கலாம்.

### சந்தனப்பொடி

சந்தனப்பொடியுடன் தயிர், கடலைமா மற்றும் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி ஊறவைத்து கழுவினால் பருக்கள் நீங்குவதோடு, முகமும் பொலிவோடு காணப்படும்.

### தேன்

தேனைக்கொண்டு பருக்கள் இடங்களில் மசாஜ் செய்து, 15-20 நிமிடம் ஊறவைத்து, பால்கொண்டு முதலில்கழுவி, பின் நீரில் அலசினால் சரும வறட்சியை தவிர்ப்பதோடு, பருக்களையும் போக்கலாம்.

பருக்கள் வந்து விட்டால் அதன் வடுக்களை மாற்றுவதில் பெண்களுக்கு வாழ்க்கையே வெறுத்துவிடும். அதனை போக்காட்ட சில வழி முறைகள்.

பருக்கள் வருவதை விட அவை விட்டுச் செல்லும் வடுக்கள்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பருக்கள் வந்ததால் முகத்தில் இருக்கும் ஓரிரு வடுக்களை நிச்சயமாக போக்க முடியும்.

முதலில் வடுக்கள் ஏன் ஏற்படுகின்றன என்றால், முகப்பரு வந்ததும் அதனை நகத்தால் கீறுகிறார்கள். நகம் பட்டாலே வடு விழுந்துவிடும். அதனை உடனடியாக போக்க முடியாது. சிறிது காலம் பிடிக்கும். சிலருக்கு பருக்கள் வந்து முகத்தில் சிறிய பள்ளங்களே ஏற்பட்டிருக்கும். முகப்பரு வந்தால் அதனை நீக்குவதற்கு முன்பு, ஐஸ் கட்டிகளால் ஒத்தடம் கொடுத்த பிறகு அதில் கை வைப்பது நல்லது.

இதனால் பருக்களின் வழியாக ரத்தம் வெளியாவது தவிர்க்கப்படுகிறது. பொதுவாக பருக்கள் வந்தால் அது முற்றிய நிலையில் அதில் இருக்கும் வெள்ளையான திரவத்தை எடுத்து விடுவது மிகவும் முக்கியம். அதிலும் மற்ற இடங்களில் அவை படாமல் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது. மேலும், பருவை நீக்குவது என்பதை கவனமாக செய்ய வேண்டும். பருவை கைகளால் கிள்ளி எடுத்துவிடுகிறோம். அதில் இருந்து வெள்ளையான திரவம் வெளியான பிறகு ரத்தம் வரும். அதனை துடைத்துப் போட்டு விட்டு அப்படியே விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டால் தான் பருக்கள் பரவுகிறது. பருக்கள் வந்தால் அதனை நீக்கியதும் உடனடியாக அதனை சுத்தப்படுத்திவிட்டு அதில் ஏதாவது ஒரு பேஸ் பேக்கை (க்ரீம்) போட வேண்டும். அப்படி போடாவிட்டால், பருவில் ஏற்பட்ட துளைக்குள் தூசு, துகள்கள் போய் பெரிய பிரச்சினையாகிவிடும்.

பருக்கள் வருபவர்கள் எந்த விதமான க்ரீம்களையும் பயன்படுத்தக் கூடாது. சிலரது முகத்தில் விரலைக் கூட வைக்க முடியாது. அந்த அளவிற்கு வலி எடுக்கும். அவர்கள் அழகுக் கலை நிபுணரிடம் செல்வதை விட, ஒரு தோல் மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

பருவை மட்டும் நீக்கிவிட்டாலும், உள்ளுக்குள் இருந்து சீழ் போன்ற ஒன்று வந்து கொண்டே இருக்கும். அதனை எவ்வளவுதான் எடுக்க முடியும். ஒரு வேளை அது சருமத்திற்கு அடியிலேயே தங்கிவிட்டாலும் பிரச்சினையாகி விடும். அதிகமாக எடுத்தாலும் பரு இருந்த இடத்தில் வடு ஏற்பட்டு விடும். எனவே பருவை அழகுக் கலை நிபுணரிடம் சென்று நீக்கிக் கொள்வதைவிட ஒரு மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

முகத்தில் அதிகமான பருக்கள் இருப்பவர்கள் அவசியமாக பேஷியல் செய்தே ஆக வேண்டும் என்று நினைத்தால் முதலில் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்று விட்டு பிறகு பேஷியல் செய்து கொள்ளலாம்.

ப்ளீச் செய்யலாம். ஏனெனில் ப்ளீச் செய்வதால் முகத்தில் இருக்கும் எண்ணெய் தன்மை நீக்கப்பட்டுவிடும். எனவே ப்ளீச்சிங் செய்து கொள்ளலாம்.

**முகத்தில் அதிகமான பருக்கள் இருப்பவர்கள் அவசியமாக பேஷியல் செய்தே ஆக வேண்டும் என்று நினைத்தால் முதலில் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுவிட்டு பிறகு பேஷியல் செய்து கொள்ளலாம்.**

எமது முகத்தின் அழகு எமது கைகளில் தான் உள்ளது. யாருமே அழகில்லை என்று இல்லை . எல்லோரிடமும் அழகு உள்ளது. ஆனால் அதை பாராமரிப்பதை பொறுத்தே எமது அழகினை தக்க வைக்க முடியும். கண்டபடி கவலைப்படுவதை விட்டு மனதையும் உடலையும் சுத்தமாக வைத்து முகத்தை சரியான வழிமுறையில் பராமரிப்பதன் மூலம் முகப்பரு தொல்லையில் இருந்து விடுதலை பெற்று இளமை தித்திக்க வாழ முடியும்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# வேட்பாளர்களின் பலங்கள்

இன்னும் சில தினங்களில் தேர்தல் வருகிறது. உங்கள் ஒவ்வொருவரின் சுட்டுவிரலும் ஒரு போராயுதமாகப் போகிறது. நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என்பதில் பெருமளவிற்கு சந்தேகம் இல்லை. தமிழ்தேசியத்தை சமரச மற்ற முறையில் முன்னகர்த்தி கொண்டிருப்பவர்கள்தான் எப்பொழுதும் தமிழர்களின் ஏகோபித்த தெரிவாக இருப்பார்கள். இதனால்த்தான் இம்முறை தேசியகட்சிகள் கூட பிரபாகரன் புராணம் பாட ஆரம்பித் துள்ளனர்.

என்னதான் எல்லோரும் தேசியம் பேசினாலும், அதில் எத்தனைபேரின் தேசியம் 'சைனிஸ் உற்பத்தி தேசியம்' என்பது தேர்தலின் மறுநாளே தெரிந்துவிடும். திடீரென முளைத்துள்ள இந்த திடீர் தேசியவாதிகளால் தேர்தல் பிரசார அரங்குகள் அதிர்ந்தபடியுள்ளன.

இம்முறையாழ்களத்தில்களமிறங் கியுள்ள தமிழ்தேசிய கூட்டமைப் பின் வேட்பாளர்களின் பலங்கள், அவர்களின் பின்னணிகள் பற்றிய அலசல் இது. வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கத்தினடிப் படையில் வரிசைப்படுத்தப்பட்டுள் ளனர்.

**இல 1**
**கந்தையா அருந்தவபாலன்**

தமிழ்தேசிய கூட்டமைப்பில் இளையவர். ஏற்கனவே ஒருமுறை




போட்டியிட்டு தோல்வியடைந் திருந்தார். சாவகச்சேரியின் பிரபல பாடசாலையான டிரிபேக் கல்லூரியின் அதிபர். தென்மராட்சி யின் கல்விச்சமூகம் இவரின் பின்னால் நிற்பது இவர் பலம். விடுதலைப்புலிகளின் தீவிர ஆதர வாளர். இதனாலேயே பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தவர். இராணு வத்தால் கடத்தப்பட்டு, பலதட வைகள் கைது செய்யப்பட்டு, சித்திர வதைகளை அனுபவித்தவர். போதைப்பொருளுக்கெதிராக மணவர்கள் மத்தியில் விழிப்புணர் வூட்டும் பிரசார திட்ட மொன்றி லும் கடந்த சிலகாலமாக ஈடுபட்டு வருகிறார். சாவகச்சேரியிலேயே வாழ்ந்துவருபவர்.

புதியவருக்குவாக்களிக்கவேண்டு மென நினைப்பவர்கள் இவரையும் ஒரு தெரிவாக கொள்ளலாம்.

**இல 2**
**அனந்தராஜ் நடராஜா**

வல்வெட்டித்துறை நகரசபை தலைவராக இருந்தவர். போராட்ட வரலாற்றுடன் நீண்டகாலமாக பின்னிபிணைந்துள்ளார். இந்தியப் படைகள் புரிந்த வல்வெட்டித் துறைபடுகொலையை 'வல்வைப்படு கொலை' என்ற நூலின்மூலம் ஆவணமாக்கியவர். இவர் தேர்வு பொருத்தமான தேர்வுதான்.

பாடசாலை அதிபராக கடமை யாற்றியவர். கல்விப்புலத்தி; பின்னணி இவருக்கும் உள்ளமை பலம். வல்வெட்டித்துறை நகரசபை



யில் பிளவு ஏற்பட்டபோதும், அதனை எதிர்த்து உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார். அவரது விடாப்பிடியான போக்கு பரவலாக பேசப்பட்டது. இவர்போன்ற செயற்றிறன் மிக்கவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் அவசியம் என இவரது ஆதரவா ளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். புதியவர், நிலைப்பாட்டில் உறுதியானவரை தேர்வு செய்ய வேண்டுமென கருதுபவர்கள் இவரை தெரிவு செய்யலாம்.

**இல 3**
**சுமந்திரன்**


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் கடந்த பாராளுமன்றத்திற்கு தெரிவான வர். கூட்டமைப்பின் வெளிவிவ கார நடவடிக்கைகளை பெருமள வில் கவனித்து வந்தவர். சட்டத்தர ணியான இவர் அரசியலமைப்பு மற்றும் மனித உரிமை தொடர்பான சட்டத் தேர்ச்சி உடையவர். தமிழ் மக்கள் சார்பான பல்வேறு வழக்குகளில் ஆஜராகி வாதாடி வருபவர் இவரே. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் சார்பில் பங்கெடுப்பவர்.



சர்வதேச இராஜதந்திரிகளால் இவரின் அணுமுறைகள் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் சட்ட ரீதியான போராட் டங்களில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தோற்றத்திற்கு முன்பி ருந்தே போராடி வருபவர். இவரின் தேவை தமிழ் மக்களிற்கும் கூட்ட மைப்பிற்கும் மிகவும் அவசியம் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். தமிழர்களுக்கு எதிரான போரில் நிகழ்ந்த யுத்த குற்றங்களுக்கு சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும் என உள்நாட் டில் சர்வதேசத்திலும் தொடர்ந் தும் வலியுறுத்துபவர். பாராளு மன்றத்திலும் சர்வதேசத்திலும் தமிழர்களுக்கு வலுவான சமரசமின் றிய குரல் அவசியம் என கருதுபவர்கள் இவரை ஒரு தேர்வாக கொள்ளலாம்..

**இல 4**
**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர். ஈ.பி.ஆர். எல்.எவ் அமைப்பின் தலைவர். நீண்ட போராட்ட வரலாறு டையவர். தமிழ்தேசிய கூட்டமைப் பில் அங்கத்துவக்கட்சிகளின் பங்குபற்றலை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். கூட்டமைப் பில் பல் அங்கத்துவம் பேணப்பட பிரேமச்சந்திரன் முக்கியமான காரணம். அவர் இல்லாவிட்டால் பெருமளவிற்கு அந்த தன்மை இழக்கப்படும் அபாயமுள்ளது.



கடந்த ஆறுவருடங்களில் வடக்கில் நடந்த வெகுஜனபோராட்டங்கள் அனைத்திலும் கட்சிபேதமில்லாமல் பங்கெடுத்துள்ளமை கவனிக்கத் தக்கது.

மக்கள் பிரச்சனைகளிற்கு சடுதி யாக வீதிக்கிறங்கி போராடும் ஒருவர் தேவை, கூட்டமைப்பின் பதிவு என்பன அவசியமென கருதுப வர்கள் இவரை தேர்வு செய்யலாம்.

**இல 5**
**சரவணபவன்**


உதயன் பத்திரிகையின் உரிமை யாளர். யாழில் தற்போது பிரபல வர்த்தகராக உள்ளார். கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றி



பெற்றார். அவரிடம் பிரபல்ய மான ஊடக நிறுவனம் உள்ளமை சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. கிராமிய அமைப்புக்கள் மட்டத்தில் இவரிற்கு ஆதரவான நிலை காணப்படுகிறது. ஊடகங்கள் வாயிலாக அதிக பிரசாரம் செய்து வருபவரும் இவரே. கிராமங்களில் பிரசாரம் செய்யும்போது, வழக்கமான பிரசார முறைகளிற்கு மாறாக, நாடகமுறை யிலும் பிரசாரம் செய்து வருகிறார்.

**இல 6**
**சிறிகாந்தா**

ரெலோ அமைப்பின் பிரமுகர் சிறிகாந்தா. தமிழீழ விடுதலை போராளியாக இளமைக்காலத்தில் அரசியல் வாழ்வை ஆரம்பித்தவர். பின்னர் சட்டத்தரணியாகி, அந்த துறையில் புகழ்பெற்றுள்ளார். ஏற்கனவே பாராளுமன்ற உறுப் பினராகவும் இருந்தவர். நிலைப்




பாடுகளில் விட்டுக்கொடுப்பற்றவர் என கூறப்படுகிறது. பாராளு மன்ற அங்கத்தவராக இருந்த காலப் பகுதியில் அவர் ஆற்றிய உரைகள் அதிகம் கவனிக்கப்பட்டன.

சட்டப்புலமை, போராட்ட பங்களிப்பு என்பன அவரது பலங்கள். சட்டத்துறை தேர்ச்சி, விட்டுக்கொடாத நிலைப்பாடு என்பனவற்றை எதிர்பார்ப்பவர்கள் இவரை தெரிவாக கொள்ளலாம்.

**இல 7**
**தர்மலிங்கம் சித்தார்த்தன்**

தற்போதுள்ள அரசியல்வாதி களில் மிகமூத்த போராளி. சிறுவயது



முதல்கொண்டு போராட்ட வாழ்வையே கொண்டவர். தமிழீழ விடுதலைக்காக இளமையிலேயே வெளிநாட்டு வாழ்வை துறந்து களத்திற்கு வந்தவர். இடையறாது போராட்டத்துடன் சம்பந்தப்பட்டுள்ளவர். 1961 இல் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்ச்சியான செயற்பாட்டை கொண்ட ஒரே தமிழ்அரசியல்வாதி இவர்தான்.

இவற்றிற்கு மேலதிகமாக எளிமை, நிதானம், இலகுவாக அணுகும் தன்மை என்பன இவரது பலங்கள். கோப்பாய் கல்வியியல் கல்லூரி அமைக்க சொந்த நிலம் வழங்கியமை, வவுனியா நூலகம் அமைத்தமை உள்ளிட்ட பல குறிப்பிடும்படியான செயற்பாட்டை செய்தவர். எளிமை, நேர்மை, தாரளகுணம், விட்டுக்கொடாத செயற்பாட்டு தன்மையை விரும்புபவர்கள் இவரை தேர்வு செய்யலாம்.

**இல 8**
**மதனி நெல்சன்**

தமிழ்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் யாழில் களமிறங்கியுள்ள ஒரே பெண் வேட்பாளர். ஏற்கனவே



பருத்தித்துறை பிரதேசசபையின் உறுப்பினராக உள்ளார். என்றாலும், தேர்தல் அறிவிக்கப்படும்வரையில் பெருமளவிற்கு அறியப்பட்டி ருக்கவில்லை.

வேட்பாளர் பட்டியலில் இவர் உள்ளடக்கப்பட்டதும் பரவலான ஆச்சரியத்தை கிளப்பியது. பெண் பிரதிநிதித்துவம் ஒன்றின் அவசியத் திற்காக உள்ளடக்கப்பட்டிருக்க லாம். எனினும், அவர் தன்னை நிருபிக்க இதுவரை அரசியல் களத்தில் வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக் கவில்லையென்பதையும் குறிப்பிட வேண்டும். புதியவர், பாராளுமன் றத்தில் பெண் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்ப்பவர்கள் இவரை தேர்வு செய்யலாம்.

**இல 9**
**மாவை.சேனாதிராசா**

தமிழரசுக்கட்சியின் தலைவர். நீண்டகாலமாக அரசியலில் இருப்பவர். தமிழரசுக்கட்சியின் போராட்டங்களுடன் நீண்ட தொடர்புடையவர். தமிழரசுக் கட்சியுடன் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தாலும், ஒப்பிட்ட ளவில் மற்ற தமிழரசுக்கட்சிக் காரர்களை விட இயக்கங்களுடன் அதிக தொடர்பை பேணியவர்.


சற்றே உணர்ச்சிவசப்பட்டாலும், தொடர்ச்சியாக தமிழர் பிரச்சனை களிற்காக குரல் கொடுத்து வருகி றார். முதிர்ச்சி, அனுபவம் என்பன



கொண்ட தலைவர். அனுபவம், முதிர்ச்சி தேவையென கருதுப வர்கள் இவரை தேர்வு செய்யலாம்.

**இல 10**
**சிறிதரன்**

கிளிநொச்சியில் களமிறங்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். கடந்தமுறை அறிமுக வேட்பாளர். அந்ததடவையே பாராளுமன்றம் நுழைந்தவர். அதிரடியான பேச்சிற்கு பெயர் பெற்றவர். கிளிநொச்சியில் பாட



சாலை அதிபராக கடமையாற் றியவர். இதனால் கல்விப்புலத்தின் அதிக ஆதரவை பெற்றவர்.

அதிரடியான பேச்சுத்தான் அவரது பலம். கிளிநொச்சி மக்க ளுடன் நெருக்கமான பிணைப்பை பேணி வருபவர்.

பாராளுமன்றத்தில் அதிரடியான பேச்சை விரும்புவர்கள் இவரை தேர்வு செய்யலாம்.

இப் பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேட்) லிமிற்றட் நிறுவனத்தினரால் இரத்மலானை,
ஸ்ரீ தர்மராம வீதியில் இல 59 இல் உள்ள எடிசன் அட்வரைசிங் நிறுவனத்தாரின் அச்சகத்தில் 14.08.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது